பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
## Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 08 வியாழக்கிழமை 22.06.2023 கதிர் 223

# பொறுப்புக்கூறல் இன்றி இலங்கையில் அமைதி, நல்லிணக்கம் சாத்தியமில்லை

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கை

பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்தாது இலங்கை சமாதானத்தினையும், நல்லிணக்கத்தையும் அடையமுடியாது என்று எச்சரித்துள்ளார் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள்ஆணையாளர்வோல்க்கர் ட்ருக் தனது வாய்மூல அறிக்கையில் தெரிவித்தார். கடந்த சில மாதங்களாக ஆளும் தரப்பு, மக்களை கொடூரமான சட்டங்களால்கட்டுப்படுத்துகின்றது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆணையாளரின் இந்த வாய்மூல அறிக்கையை பிரதி உயர்ஆணையர் நடா அல் நஷீப் ஜெனீவாவில் இன்றைய சபை அமர்வில்வாசித்தார்.2021நிறைவேற்றப்பட்ட 46/1தீர்மானத்தின்படி53ஆவது அமர்வில் ஆணையாளரின் வாய்மூல அறிக்க சமர்ப்பிக்கப்படவேண்டும். அதுவே இன்று அவரதுபிரதிநிதியினால்சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருளாதார நெருக்கடி இலங்கையைப் போலவே பல நாடுகளின் நலன்களையும், உரிமைகளையும்பாதித்துள்ளது.இலங்கைக்கு கடன் வழங்கியவர்களுடனான 2

## இது ரகசியம் அல்ல!

கிளிநொச்சி கரந்தாய்குளம் பகுதியில் பொதுப் பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட 4 பரப்புக் காணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சிக்காரர் ஒருவருக்கு அமைச்சரின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டுள்ளது. தேவா உணவகம் நடத்துபவருக்கு அந்தக் காணியை வழங்குமாறு அமைச்சர் வாய்மொழி மூலம் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சரின் இந்த நேற்றைய உத்தரவிற்கமைய உடனடியாகவே உரியவரிடம் குத்தகைப் பணம் பெறப்பட்டு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகத்தில் வைப்பு ஏற்கப்பட்டுள்ளது.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையில் இருந்த இந்த 4 பரப்புக் காணியும. பொதுப. பயன்பாட்டிற்கு என மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானித்திருந்த நிலையிலேயே தற்போது இரகசியமாக அமைச்சரின் கட்சி சார்பில் பச்சிளைப்பள்ளி பிரதேச சபையில் போட்டியிடும்வேட்பாளருக்குவழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவரது தந்தை இக் காணி 2

## பணவீக்கம் குறைந்தது

தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி, மே 2023 இல் பணவீக்கம் 22.1வீதமாக குறைந்துள்ளது. 2023 ஏப்ரல் மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 33.6 வீதமாக பதிவாகி இருந்ததாக மக்கள்தொகைகணக்கெடுப்புமற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏப்ரல்2023இல்27.1வீதமாகபதிவாகியிருந்த உணவுப் பிரிவின் வருடாந்திர பணவீக்கம் மே 2023 இல் 15.8 வீதமாக குறைந்துள்ளது. மேலும், ஏப்ரலில் 39.0 வீதமாக இருந்த உணவு அல்லாத பிரிவின் வருடாந்திர பணவீக்கம் மே மாதத்தில் 27.6 வீதமாக கணிசமாகக் குறைந்துள்ளது.

## குருந்தூர்மலைக்கு நேற்று வந்து திரும்பிய கம்மன்பில



(சண்முகம் தவசீலன்)

பிவித்துருஹெலஉறுமய கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில நேற்று குருந்தூர்மலைக்கு அமைதியாக வந்து வழிபட்டுத் திரும்பினார். முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய குருந்தூர் மலைக்கு தெற்கைச்சேர்ந்த பத்திரிகையாளர்களை ஒரு தனி வாகனத்தில் அழைத்துக்கொண்டு வந்திருந்த போதும், சிறிது நேரம் அங்கு வழிபட்டுவிட்டு அனைவரும் அமைதியாகத் திரும்பினர்.

மூன்று வாகனங்களில் வந்து சேர்ந்த கம்பன்பில அணியினர், பூசைப் பொருட்களுடன் மலைக்கு ஏறினர். மூன்று தேரர்களும் அவர்களுடன்காணப்பட்டனர். 2

## அனலை தீவில் கனேடியர் கைது

ந.லோகதயாளன்.

அனலைதீவில் கனேடியர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அங்குள்ள வைத்தியசாலையில்கடமையில்இருந்தபெண் வைத்தியருடன் முறை தவறி நடந்ததுடன் தளபாடங்களிற்கு சேதம் விளைவித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது..

அனலைதீவுவைத்தியசாலையில் செவ்வாய்க் கிழமை மாலைப்பொழுதில் இரு பொலிஸ் 2

## அல்லைப்பிட்டி மனித எச்சங்கள் போதனா வைத்தியசாலையில்

ந.லோகதயாளன்.

அல்லைப்பிட்டியில் வீட்டிற்குஅத்திவாரம்வெட்டிய சமயம் செவ்வாய்க்கிழமை மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. உயிரிழந்தஒருநபரினது என்று கருதப்படும் அந்த எச்சங்கள் அங்கிருந்து சேகரிக்ககப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

தனியார் ஒருவர் தனது காணியில் கட்டுமானப் பணிக்காக வெட்டிய குழியில் மனித எச்சங்கள் காணப்படுவதாகபொலிசாரின் கவனத்திறகுக் கொண்டு சென்றார். இதனையடுத்து குறித்த விடயம் ஊர்காவற்றுறை நீதவானின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு நீதவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் நேற்றைய குறித்த இடம் தோண்டப்பட்டது.

தோண்டப்பட்ட இடத்தில் ஒருவரின் மனித எச்சங்கள் மட்டுமேமீட்கப்பட்டன. 2

## ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் நேற்று திடீர் ஒத்திவைப்பு

### திருத்தங்கள் செய்யப்படவேண்டி இருக்கிறதாம்

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதை பிற்போடுவதாக ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதும், சட்டமூலத்தில் மேலும் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ள மையி னால், வாக்கெடுப்பு இடம்பெறும் தினம் தொடர்பில் இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள்கூட்டத்தின்போது தீர்மானம் எடுப்பதாக சபை முதல்வர் அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

குறிப்பாக, நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் சங்கம் மற்றும் சிவில் அமைப்புக்கள் முன்மொழிவுகளைச் செய்துள்ளதை அடுத்து இந்த அறிவிப்புவிடுக்கப்பட்டுள்ளது.

## குருந்தூர்மலையில் ஆர்ப்பாட்டம்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவுமாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய பகுதிகள் விரைவில் மீள்குடியேற்றப்படவேண்டும் என வயலியுறுத்தி முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் குருந்தூர் மலையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

குறிப்பாக தண்ணிமுறிப்பு, ஆண்டான் குளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984 ஆம்ஆண்டுதமதுபகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தனர்.

இந்நிலையில்இவ்வாறு இடம்பெயர்ந்ததமிழ்மக்கள் இதுவரையில் அவர்களது பகுதிகளில் மீள்குடியமர்த்தப்படவில்லை. இவ்வாறான சூழலிலேயே தண்ணிமுறிப்புப் பகுதியில் உள்ள குருந்தூர் மலையில், அங்குபாரியபௌத்தவிகாரை அமைக்கப்பட்டுள்ளதுடன், குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய விவசாய நிலங்கள் பலவும் தொல்லியல் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ளன.

குருந்தூர்மலை விவகாரம்தொடர்பிலேநீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான வழக்கு முல்லைத்தீவு நீதி மன்றில் 2

## வெளியாரின் தலையீட்டை மீள நிராகரித்தது இலங்கை

### ஜெனிவாவில் நேற்றும் தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில்நிறைவேற்றப்பட்ட 46/1, 51/1 தீர்மானங்களின் மூலமான வெளியாரின் தலையீட்டை நிராகரிப்பதாக இலங்கை தெவித்துள்ளது.

ஜெனிவாவுக்கான இலங்கையின்விதிவிடப்பிரதிநிதி, ஹிமாலி அருணாதிலக இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடரில் நேற்று மனித உரிமைகள் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்டவாய்மொழிமூலமான அறிக்கைக்கு பதிலளித்து உரையாற்றும் பேதே அவர் மேற்கண்டவாறு 2

## கட்டுத் துவக்கு வெடித்து ஒருவர் காயம்



பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி, கோவில் வயல் பகுதியில் காணி பார்க்க சென்ற நபர் கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். .

இயக்கச்சி 2

## சர்வதேச யோகா நாள் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் கோலாகலம்

### ஆயிரம் பேர் வரையில் பங்கேற்பு



ஒன்பதாவது சர்வதேச யோகாநாள்நிகழ்வு இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று கலாசார மத்திய நிலையத்தில் காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனால் யோகா நாள் நிகழ்வு தொடக்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து யோகா பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்

குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணப் 2

## ஏற்றுமதி விவசாயமே இந்த ஆட்சியின் திட்டம்

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய விவசாயத் துறையில்தொழில்நுட்பத்தை இணைத்துஏற்றுமதிவிவசாய பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்றபோது உர வரிசை, எரிபொருள் வரிசை, எரிவாயுவரிசைபோன்றவரிசைகள் மாத்திரமே காணப்பட்டன. நான் விவசாய அமைச்சராகப் பதிவியேற்றபோதும் பெரும் சாவல் நிறைந்திருந்தது. உள்நாட்டு விவசாயிகளுக்கு உரம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு முதற்கடமையாகவிவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக் கொடுத்தேன். ஜனாதிபதியின் அறிவுரைக்கமைய விவசாயிகளுக்கானஅனைத்துச் சலுகைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.அதனால்தற்போது பெரும்போக விளைச்சல் போதியளவு கிடைத்துள்ளது. சிறுபோகத்திற்குஅவசியமான உரமும் தற்போது மக்களுக்கு பெற்றுக் 2

## அரகலயவினர் மீதான தாக்குதல்களை உரியவாறு தடுக்க பொலிஸ் தவறியது

### அறிக்கையில் ஏற்றுக்கொண்டனர் அதிகாரிகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம், கடந்த ஆண்டு மே 9 அரகலய போராட்டக்காரர்கள் மீதுநடத்தப்பட்டதாக்குதல்கள் தொடர்பில் பொலிஸாரால் அறிக்கையொன்றுகையளிக்கப்பட்டுள்ளது. அதில்அரகலய போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தடுக்கப் பொலிஸார் தவறிவிட்டனர்என்றுஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு மே 9அலரிமாளிகையில்இருந்து வருகைதந்தவர்கள் மைனா கோ கம, கோட்டா கோ கம ஆகியவற்றின் மீது 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

யில் தென்னைச் செய்கை யில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பதை ஒப்புக்கு ஒரு காரணமாகக் காட்டிக்கொண்டு அந்தக் காணியை அவரிடம் ஒப்படைக்கும்படி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## பொறுப்புக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வருடத்தில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான கடன் உதவியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் நாட்டின் நலனுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தாத வகையில் நாம் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

பாதிக்கப்பட்டமக்களுக்கு பொருளாதாரத் தாக்கம் ஏற்படாத வகையில் அவர்களைப் பாதுகாப்பதற்கு நடைமுறைகள் முன்னெடுக்கப்படவேண்டும். ஊழல்களும், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் போராட்டங்களுக்குக்காரணமானது.

பொறுப்புக்கூறல் மற்றும், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான ஜனநாயக நிறுவனங்களை மறுசீரமைத்தல்அல்லதுபுதுப்பித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும்கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன்மனிதஉரிமைகளை பாதுகாக்குமாறும் நாம்சகலதரப்பினரிடத்திலும் கேட்டுக்கொள்கின்றோம். இலங்கையில் தற்காலிக ஆணைக்குழுகள்அதிகளவில் உள்ளன.அவைபொறுப்புடன் நடந்து கொள்வதில்லை. முன்பிருந்தே பொறுப்புக் கூறல் பெரும் பிரச்சினையாகவுள்ளது.

பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்படாது விட்டால் இலங்கை சமாதானத்தினையும், நல்லிணக்கத்தையும்அடையமுடியாது. கடந்த சில மாதங்களாக ஆளும் தரப்பு, மக்களை கொடூரமான சட்டங்களால் கட்டுப்படுத்துகின்றது.

போராட்டங்களைஒடுக்கி, போராட்டகளச் செயற்பாட்டார்களை கைது செய்வதற்காக இராணுவத்தினரைப் பயன்படுத்துகின்றனர். இதன் அண்மைய சம்பவமாக, நகைச்சுவை நடிகர் ஒருவர் தனது கருத்துக்காக கைது செய்யப்பட்டமையைக் கூற முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயத்தினைஉறுதிசெய்துள்ளார்கள் - என்றார்.

## அல்லைப்பிட்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தஇடத்தின்அருகில்வேறு மனித எச்சங்களோ மனிதப் புதைகுழிகள்இருப்பதற்கான சான்றுகளோ கிடைக்காத காரணத்தால், அங்கு காணப்பட்ட மனித எச்சங்கள் மேலதிக பரிசோதனைக்காக யாழ்ப்பாணம. போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வெளியாரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்ஸ்திரத்தன்மை முன்னேற்றம் கண்டுள்ளது. வாழ்க்கை முறையும்குறிப்பிடத்தக்கமுன்னேற்றத்தினைக் கண்டுள்ளது. 46/1, 51/1தீர்மானங்களுக்கு அமைவாக வெளியாரின் தலையீடுகளை இலங்கை நிராகரித்துள்ளது.

பெரும் சட்ட ரீதியான, அரசியல் ரீதியான தாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியைத்தீர்ப்பதற்காக மனித உரிமைகள் ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இலங்கை குறித்த விடயத்தில் சதகமான செயற்பாடுகளை முன்னெடுக்கும். அது அரசமைப்பின்பிரகாரம் முன்னெடுக்கப்படும் என்பதைக் கூறிநிறைவு செய்கின்றேன் - என்றார்.

## கட்டுத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோவில் வயல் பகுதியில் புதிதாக காணி வாங்குவதற்காக தரகர் ஒருவருடன் சென்றுகாணிபார்க்கமுற்பட்ட வேளை குறித்த காணியில் கட்டப்பட்டிருந்த கட்டுதுவக்கு வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

பிலிப்பையா ஸ்ரனிலஸ் என்பவரே இதில் காயமடைந்தார். ஆனந்தம் பாம்

உரித்திரபுரம் கிளிநொச்சியில் வசிப்பவர். காலில் காயம்ஏற்பட்டுபளைவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பளை பொலிசார் மேற்கொண்டுவருகிறது.(316)

## அரகலயவினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்கள் நடத்தியமை தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடுதொடர்பிலேயே இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. சோஷலிச இளைஞர் முன்னணியினர் இந்த முறைப்பாட்டைச் செய்திருந்தனர். இது தொடர்பான விசாரணைக்காக இரு தரப்பினரும் இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக் குழுவிற்கு நேற்று வருகை தந்திருந்தனர்.

அங்கு நடந்தது தொடர்பில் சட்டத்தரணி சுனில்வட்டகல தெரிவித்ததாவது:

எமது முறைப்பாட்டுக்கு அமைவாகப்பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்ட பொலிஸ் தரப்பிலிருந்து வருகை தந்திருந்த அதிகாரி ஆணைக் குழுவிடம் அறிக்கை சமர்பித்தார். அந்த அறிக்கையில், பொலிஸார் குறித்த தாக்குதல் சம்பவத்தினை உரிய முறையில்தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த இடத்திற்கு வருகை தந்திருந்தவர்கள் போராட்டக்காரர்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் குறித்த இடத்திற்கு வருகை தந்தவர்கள் போராட்டக்காரர்களே இல்லை.

மேலும், போராட்ட களத்தில் ஏற்பட்ட வன்முறையைக் கட்டுப்பத்துவதற்கான பொலிஸார் எண்ணிக்கை குறைவாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர். இந்த நிலையில் குறித்த விடயத்தினை ஏற்கனவே நீதிமன்றில்உள்ளவழக்குடன்இடையீடாக முன்னகர்த்தி விசாரணைக்குஉட்படுத்துவதற்கும் இணக்கம் ஏற்பட்டுள்ளது - என்றார்.

## அனலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர்கள் சகிதம் சென்ற கனேடியப் பிரஜையேஇவ்வாறுகுழப்பம் விளைவித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதுகுறித்துவைத்தியசாலைத் தரப்பால் ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ஆதாரமாக வைத்தியசாலை சீ.சீ.ரிகமராவின்ஒளிப்பதிவும் வழங்கப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் தற்போது கனேடியப் பிரஜைகைதுசெய்யப்பட்டார். அவருடன் சென்றார்கள் எனக்கூறப்படும் இரு பொலிஸார் மீதும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## ஆர்ப்பாட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலுவையிலுள்ள நிலையில், முல்லைத்தீவு

பொலிசாரோ, தொல்லியல் திணைக்களமோ அல்லது, பௌத்தபிக்குகளோ நீதிமன்றை மதிப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்தரப்புகளானநாம் தான் நீதிமன்றத்தினதும், நீதிபதியினதும்கட்டளைகளை மதித்து நடக்கின்றோம். இந்நிலையில் கொழும்பிலே இருக்க வேண்டிய, கொழும்பைப்பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றஉறுப்பினர்கள் சிலர் இனவாதத்தைத் தூண்டும்விதமாககுருந்தூர் மலைக்குவருகைதருவதும், பார்வையிடுவதுமாகச்செயற்படுகின்றார்கள்.

தெற்கிலே தமது வாக்கு வங்கியைப் பலப்படுத்துவதற்காகவே சில இனவாத அர சியல்வாதிகள்இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். குருந்தூர் மலையை அண்டிய பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரிய 306 ஏக்கர் காணிகளைஅபகரிக்கும்நோக்குடன் தொல்லியல் திணைக்களம் செயற்ப டுகின்றது. - என்று துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

நேற்று ஆர்ப்பாட்டததில் ஈடுபட்டவர்கள் பதாகைககளை ஏந்தியபடி அரசுக்கு எதிராகச் சிறிது நேரம் முழக்கமிட்டபின்னர் கலைந்து சென்றனர்.

## ஏற்றுமதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்றுக்கொண்ட போது விவசாயிகள் விவசாய நிலத்தை விடுத்து ஆர்ப்பாட்டபூமியில்களமிறங்கியிருந்தனர். தற்போது விவசாயிகள் தேசிய உற்பத்திக்குப் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். சில அரசியல் தலைவர்களே விவசாயிகளை ஆர்ப்பாட்ட களத்திற்கு இழுத்தார்கள் என்பது இரகசியமல்ல. விவசாயிகளை விவசாய செயற்பாடுகளிலிருந்து விடுபடச்செய்துமக்களையும் பசியில் வாடச் செய்யும் அரசியல் சூழ்ச்சியையும் சிலர்முன்னெடுத்தனர். அந்த சவால்களுக்கு ஜனாதிபதி தலைமையிலானஇந்தஆட்சி திறம்பட முகம் கொடுத்தது.

ஜனாதிபதியின்விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் ஹெக்டெயார் ஒன்றில் பெற்றுக்கொள்ளக்கூடிய அறுவடையின்தொகையை அதிகரித்துக்க முடிந்துள்ளது. சில விவசாயிகள் குறிப்பிட்ட பருவகாலங்களில் 11 ஆயிரம் கிலோவை அறுவடை செய்துள்ளனர். மரக்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியிலும் புதிய தொழில் நுட்பத்தை உள்ளீடு செய்வதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் கீழ் இலங்கை மக்களின்உணவுத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். அதன் பின்னர் வெளிநாட்டுவருமானத்தை ஈட்டக்கூடிய வலுவான திட்டமிடல்ஒன்றைதயாரிக்க இருக்கின்றோம்..வெளிநாட்டு வருமானத்தை ஈட்டக்கூடிய விவசாய அமைச்சு ஒன்றை உருவாக்குவதே எமது நோக்கம்-என்றும்அமைச்சர் தெரிவித்தார்.

மேலும்முட்டைமற்றும் கோழி இறைச்சிக்கு சலுகை வழங்கநடவடிக்கைஎடுத்துள்ளோம். முட்டை வியாபாரம் மற்றும்விவசாயம்தற்போது நல்லநிலைக்கு வருகின்றது. மக்கள் பட்டினியால் வாடுவதாக ஊடகங்கள் முன் கூறி மக்களைத் தூண்டி விடும் நோக்கில் சில எதிர்க் கட்சிக் குழுக்கள் செயற்படுகின்றன.ஆனால் இலங்கையில் பசியால் யாரும் இறப்பதில்லை. ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்றபோது இருந்த அரிசியின் விலைக்கும் தற்போது அரிசியின் விலைக்கும் அதிக வித்தியாசம் உள்ளது. இப்போது வெள்ளைப்பச்சரிசிஒருகிலோவை நீங்கள்125 முதல் 130 ரூபாவுக்கு வாங்கலாம். கட்டுப்பாட்டு விலைக்கும் குறைவான விலைக்கு அரிசியைத் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுப்போம். அதன்படி, கடந்த ஆண்டை விட மக்கள் எளிதாகபொருட்களைவாங்க முடியும்.

இவ்வாறு கொள்வனவு செய்வதற்கான போதிய நிதி திறைசேரியில் இருந்து வழங்கப்படும் என எமக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, சிறுபோக விளைச்சலை கொள்வனவு செய்ய ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது.

வன விலங்குகளால் விவசாயத்திற்கு அதிகளவில் சேதம் ஏற்படுகின்றது. கடந்த வருடம் மாத்திரம் 03 மில்லியன் தேங்காய்கள் குரங்குகளினால்சேதமடைந்துள்ளன. ஆனால் குரங்களை ஏற்றுமதி செய்வது பற்றிப் பேசும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் விவசாய அமைச்சிடம்இதுவரைகுரங்குகளின் பிரச்சினைக்கு வெற்றிகரமான தீர்வு எதனையும் முன்வைக்கவில்லை.

உலக நாடுகளில் விலங்குகள் பெருகியபோது அவற்றைக் கொன்று விலங்குகளின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் நம்மால் அவ்வாறு செய்ய முடியாது. எனவே, அனைவரும் சேர்ந்து கலந்துரையாடி இதற்கு விரைவான தீர்வை வழங்க வேண்டும் - என்றும் தெரிவித்தார்.

# 3,200 கடல் சங்குகளுடன் 2 பேர் வசமாகச் சிக்கினர்

## 3 ஆயிரத்து 200 கடல் சங்குகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கற்பிட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரத்து 200 கடல் சங்குகளை இன்று (21) பிற்பகல் மீட்டுள்ளதாகக் கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு அளவிலான கடல் சங்குகள் 40 சாக்கு மூட்டைகளில் அடைக்கப்பட்டிருந்ததுடன், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கற்பிட்டிப்பொலிஸார் குறிப்பிட்டனர்.

கற்பிட்டி பொலிஸ் விசேட பணியகத்துக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் கற்பிட்டிப் பொலிஸ் பரிசோதகர் ஷான் முனசின்ஹ உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 28 வயதுடைய கற்பிட்டியைச் சேர்ந்த இளைஞர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதை மாத்திரைகளுடன் பசறையில் இருவர் கைது!

பசறையில் இருவேறு பகுதிகளில்போதைமாத்திரைகளுடன்இருவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.பசறை, கணேயல்ல பகுதியில் போதை மாத்திரைகளுடன் 25 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 69 போதை மாத்திரைகளுடன் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பசறை - பராக்கிரமமாவத்தைபகுதியில் 50போதைமாத்திரைகளுடன் 19 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டஇருவரையும் பதுளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## குருந்தூர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றக்கட்டளையையும் மீறி அமைக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும்விகாரையில் அவர்கள் வழிபாடு நடத்தினர். சுடர் ஏற்றி மலர் வைத்து ஊதுபத்தி கொழுத்தி வழிபட்டனர்.

குருந்தூர்மலையில் உள்ள ஏனைய இடங்களையும் அவர்கள் சுற்றிப் பார்வையிட்டனர். தொடர்ந்து தான் அழைத்து வந்த ஊடகவியலாளர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில கருத்துத் தெரிவித்தார். வடமாகாண பிரதான சங்க நாயக்கர் கல்கமுவ சந்தபோதி தேரரும் கருத்துத் தெரிவித்தனர்

அங்குகூடியிருந்ததமிழ் ஊடகவியலாளர்கள்சிலரைச் சுட்டிக்காட்டி, இவர்கள்தான் இந்தவிடயங்களைக்ஊடகங்களுக்கு கொண்டு சென்று பிரச்சினை ஆக்குகின்றனர் என்று வடமாகாண பிரதான சங்க நாயக்கர் கல்கமுவ சந்தபோதி தேரரரால் அங்கு வருகைதந்தவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது

முல்லைத்தீவுமாவட்டத்தில்தண்ணிமுறிப்புகுருந்தூர் மலை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. அங்கு நீதிமன்றக் கட்டளையை மீறி விகாரை அமைக்கப்பட்ட விவகாரம் இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியில் பெரும் விவகாரமாக உருவெடுத்துள்ளது

குருந்தூர் மலையில் தொல்பொருள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட 79 ஏக்கர் காணியில்நீதிமன்றக்கட்டளையை மீறி விகாரைஅமைக்கப்பட்ட விவகாரம் வழக்கு விசாரணையில் உள்ளது. அதற்கு மேலதிகமாகத் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விட ,விவசாயக் காணிகள் உள்ளடங்கலாக 279 ஏக்கர் தொல்பொருள் திணைக்களத்தினால் மீள எல்லையிடப்பட்டுள்ள நிலையில் காணிகளை விடுவிக்க மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்

அண்மையில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் ஜனா திபதிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் குருந்தூர்மலை விவகாரம் பிரஸ்தாபிக்கப்பட்டநிலையில் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பதவி விலகியிருந்தார்

இவ்வாறான பின்னணியில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலகுருந்தூர்மலைக்குவந்து திரும்பியுள்ளார்.

## சர்வதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், யாழ்ப்பாணப் படைகளின் கட்டளைத் தளபதி ஹெட்டியாராச்சி, யாழ் இந்திய துணை தூதரக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

யோகாபயிற்சி நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் கல்வியிலாளர்கள் என பலரும்கலந்துகொண்டனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# சட்டத்தரணி ஹிஜாஸ் விவகாரத்தில் நியாயமான வழக்கு விசாரணைகளை உறுதிப்படுத்துங்கள்

## 8 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் அரசிடம் வலியுறுத்து

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விவகாரத்தில் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் நியாயமான வழக்கு விசாரணைக்கு உள்ளாவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும், பயங்கரவாதத்தடைச்சட்டம் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்படவேண்டும் என்றும் 8 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் இலங்கையிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பாக சட்டத்தரணிகளுக்கான சட்டத்தரணிகள், மனித உரிமைகள் சட்டத்தரணிகள் குழு, சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் குழு, சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சட்ட சமூகம், கனேடிய சட்டத்தரணிகளின் உரிமைகள் கண்காணிப்பகம், மனித உரிமைகளுக்கான சர்வதேச பேரவை மற்றும் சித்திரவதைக்கு எதிரான உலகளாவிய அமைப்பு ஆகிய 8 சர்வதேச அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மீதான வழக்கு விசாரணைகளின்போது நியாயமான வழக்கு விசாரணைக்கு உட்படுவதற்கான அவரின் உரிமை மீறப்படுகின்றமை தொடர்பில் தீவிர கரிசனையடைகின்றோம். இந்த வழக்கின் முக்கிய சாட்சியாளர் அச்சுறுத்தலுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்.

சட்டத்தரணி மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என்ற ரீதியில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க முற்பட்டதன் விளைவாகவே அவர் தண்டிக்கப்பட்டார் என்று நம்புவதற்கான வலுவான காரணங்கள் எம்மிடம் உள்ளன.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், சாட்சியாளருக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்பில் வெளியாகியுள்ள செய்திகள் இந்த விசாரணைகள் நியாயமான முறையில் இடம்பெறுமா என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளன.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக சாட்சியமளிக்குமாறு குற்றப்புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளால் மிகுந்த அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாக 11 - 14 வயதுக்கு இடைப்பட்ட 4 சிறுவர்கள் உயர்நீதிமன்றத்திடம் முறைப்பாடளித்துள்ளனர். இவ்விவகாரம் தொடர்பில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட சிலரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதுடன் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக சாட்சியம் வழங்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்ட முதலாவது சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஆவார்.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் நியாயமான வழக்கு விசாரணை ஆகியவற்றில் மட்டுப்பாடுகளை ஏற்படுத்துவுதற்கும், அரசியல் ரீதியான மாற்றுக்கருத்துக்களை ஒடுக்குவதற்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டுவருவதாக சர்வதேச ரீதியில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச்சட்டம் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறியிருப்பதால், அந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்குமாறு ஐரோப்பிய நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் திருத்தியமைப்பதாக அரசாங்கம் பலமுறை வாக்குறுதி வழங்கியுள்ள போதிலும், அச்சட்டத்தில் அர்த்தமுள்ள திருத்தங்களைமேற்கொள்வதற்குத்தவறியிருக்கின்றது.



இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச சட்டத்தின்கீழ் நியாயமான வழக்கு விசாரணைக்கு உள்ளாவதற்கான அனைத்து வாய்ப்புக்களும் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்படவேண்டும்.

அத்தோடு அவருக்கு எதிரான அனைத்து அடக்குமுறைகளும் முடிவுக்குக்கொண்டுவரப்படுவதுடன் சாட்சியாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். பயங்கரவாதத்தடைச்சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு அமைவாகத் திருத்தியமைக்கவேண்டும் என்று அக்கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# நாட்டின் அரசியல் கட்சிகள் எதிர்காலத்தில் பொய் வாக்குறுதி வழங்கித் தப்பமுடியாது

## எரான் விக்கிரமரத்ன எச்சரிக்கை



வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்படும் பிரேரணைகள் முறையாக செயற்படுத்தப்படுகிறனவா என ஆராயும் பொறுப்பு நாடாளுமன்ற வரவு -செலவு திட்ட அலுவலகத்துக்கு இருக்கிறது.

அதனால் இந்த சட்டம் வந்த பின்னர் எதிர்காலத்தில் அரசியல் கட்சிகளுக்கு பொய் வாக்குறுதிகளைவழங்கிதப்பிக்கமுடியாது என எதிர்க்கட்சி உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடாளுமன்ற வரவு - செலவு திட்ட அலுவலகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்-

நாடாளுமன்ற வரவு - செலவு திட்ட அலுவலகம் அமைப்பதற்கான சட்டமூலம் 2015 இல் அன்று ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது.

அப்போது இந்த சட்டமூலத்துக்கு பல்வேறு விமர்சனங்களைத் தெரிவித்து அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ வந்து அதில் மாற்றத்தை ஏற்படுத்தி, நாட்டை வங்குரோத்தாக்கி விட்டு சென்றார்.

ஆனால் தற்போது காலம் கடந்தாவது மீண்டும் இந்த சட்டமூலத்தை கொண்டுவந்திருப்பதை வரவேற்கிறோம்.

மேலும், நாட்டில் சூழலை சரி செய்யாமல் சட்டம் கொண்டுவந்து பயனில்லை. நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவதற்கு தடையாக இருந்தன.

குறிப்பாக வர்த்தகர் தினேஷ் சாப்டரின் கொலை தொடர்பாக இன்னும் நீதி கிடைக்கவில்லை. அதேபோன்று ஓமான் நாட்டு முதலீட்டாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் இதுவரை அவருக்கு நீதி கிடைக்கவில்லை.

அதனால் நாட்டில் நீதி நிலைநாட்டப்படுவது தொடர்பில் நம்பிக்கை இல்லாமல் போயிருக்கிறது. அதனால் முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவதற்கு நாட்டில் சிறந்த சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதுடன் சட்டம் தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன், கைது செய்யும் நடவடிக்கைகளின்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தி நடவடிக்கை எடுத்ததைபோன்று ஐ.சி.சி.பீ-ஆர். சட்டத்தின் கீழ் கைது செய்யவேண்டாம்.

அதனை உடனடியாக நிறுத்துமாறு கேட்கிறோம். ஏனெனில் நாட்டுக்கு முதலீட்டார்கள் வருவதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் தடையாக இருக்கின்றன.

அதனால் சட்டம் கொண்டுவந்து நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது. அதற்குத் தேவையான சூழலையும் ஏற்படுத்தவேண்டும். பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தாவிட்டால் அது முதலீடுகளுக்கு நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும்.

அத்துடன், நாடாளுமன்ற வரவு -செலவுத் திட்ட அலுவலகம் மிக முக்கியமானதாகும். வரவு - செலவுத் திட்டத்தில் அளிக்கப்படும் வாக்குறுதிகள் பிரேரணைகள் முறையாக செயற்படுத்தப்படுகிறதா என ஆராயும் பொறுப்பு இந்த காரியாலயத்துக்கு இருக்கிறது.

அதனால் கடந்த காலங்களில் தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகள் அதிகாரத்துக்கு வந்த பின்னர் நிறைவேற்றப்படவில்லை. அதனால் தற்போது இந்த சட்டம் வந்த பின்னர் எதிர்காலத்தில் அரசியல் கட்சிகளுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்கி தப்பிக்க முடியாது - என்றார்.

(05)

# அரசின் நிவாரணக் கொடுப்பனவுகள் தடையின்றி வழங்கப்பட்டுவருகின்றன

## பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தகவல்



அரசாங்கம் வழங்கும் நிவாரண கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன. ஏதாவது பிரதேசங்களில் அதில் குறைபாடுகள் காணப்பட்டால் அதனை நிவர்த்திக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் சந்திம வீரக்கொடி எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்திம வீரக்கொடி குறிப்பிடுகையில் -

அரசாங்கத்தால் மூத்த பிரஜைகளுக்காக மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவு கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை.

அதேவேளை, வலது குறைந்தவர்களுக்காக வழங்கப்படும் கொடுப்பனவும் இவ்வாறு வழங்கப்படுவதில்லை அது தொடர்பில் நிதியமைச்சு உடனடி கவனத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

நிதி அமைச்சு மக்களுக்கு வழங்கும் நிவாரண கொடுப்பனவுகளில் எத்தகைய குறைபாடுகளையும் வைக்கவில்லை. அவ்வாறான கொடுப்பனவுகள் உரிய காலத்தில் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் ஏதாவது பிரதேச செயலாளர் பிரிவிற்கு அந்தக் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை யென்றால் நாம் சமூக ஊக்குவிப்பு அமைச்சின் மூலம் அதனை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (05)

# ஏழை விவசாயிகளது வாழ்வாதாரத்தையே அரசு கூடுதல் கவனத்திலெடுக்கவேண்டும்

## கோவிந்தன் கருணாகரம் வலியுறுத்து

(அகீல்)

நெல் விலை நிர்ணயத்தில், அரிசி ஆலை உரிமையாளர்கள் அழுத்தம் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அரசாங்கம் கவனத்திலெடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்ற வரவு -செலவுத் திட்ட அலுவலகம் தொடர்பான சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஜனா -

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே வரவு - செலவுத்திட்டம் மூலமாக ஒதுக்கப்படும் நிதிகள் ஒதுக்கப்படாமல் நாங்கள் எந்தவித அபிவிருத்தி வேலைகளையும் எமது மக்களுக்குச் செய்யமுடியாத சூழ்நிலையில் இருந்து கொண்டு இந்த வரவு - செலவுத்திட்ட அலுவலகம் சம்பந்தமான விவாதத்தில் எப்படிப் பங்கு பெறலாம் என்று யோசிக்கின்றேன்.

இருந்தாலும் எனது மாவட்ட மக்கள் சம்பந்தமாக சில விடயங்களையும் இந்த விவாதத்தில் எடுத்துரைக்கலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவதாக கடந்த 28.05.2023 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தவேந்திரன் மதுசுதன் என்ற 20 வயது மாணவன் இந்தியாவின் தனுஸ்கோடியிலிருந்து தலைமன்னார் வரையான 23 கிலோமீற்றர் கடலை நீந்திக் கடந்திருக்கின்றார்.

ஒரு சாதனை புரிந்திருக்கின்றார். அதுவும் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் கடலில் பிளாஸ்ரிக் கழிவுகள் அதிகரிப்பதால் ஏற்படும் பின்விளைவுகளையும், பின்விளைவுகளைத் தடுப்பதற்கும் மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகா, சிறுவயதில தற்கொலைக்குச் செல்லாத மனோநிலையை வலுப்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் சாதனைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டால் இவ்வாறான விடயங்களிலிருந்து விடுபடலாம் என்ற விழிப்புணர்வுகளுக்காக இந்த சாதனையைப் புரிந்துள்ளார்.

அந்தவகையில் இந்த நாடாளுமன்றத்தின் ஊடாக அந்த மாணவனுக்கு பாராட்டுக்களைச் தெரிவிக்கவேண்டிய கடமையிலிருக்கின்றேன். அது மாத்திரமல்ல இன்றைய விவாதத்தின் ஆரம்பத்திலே 27/2 கேள்வியின் மூலமாக இந்தச் சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒரு கூற்றை முன்வைத்திருந்தார். உண்மையிலேயே விவசாயிகள் சார்பாக நான் அவருக்கு பாராட்டுத் தெரிவிக்கிறேன்.

இன்று மட்டக்களப்ப மாவட்டம் மாத்திரமல்ல அம்பாறை போன்ற பிரதேசங்களிலும் நெல் அறுவடை ஆரம்பித்து விட்டது. ஆனால் நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக அவர்களுடைய நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் எவையும் நடைபெறவில்லை என்பது மாத்திரமல்லாமல் நெல்லுக்குரிய சரியான விலையைக் கூட இந்த அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை.



இன்றைய 27/2 கீழான கேள்விக்குக் கூட விவசாய அமைச்சர் அவர்கள் சரியான பதிலைக் கூறாமல் தாங்கள் கூடி முடிவெடுத்து அறிவிப்பதாகக் கூறியிருக்கின்றானர்.

இன்றைய பொருளாதார நிலைமையில் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளில் கூட விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு கிலோ நெல்லை 95 ரூபாவுக்கு விற்ற பண்ணைகள், இன்று ஒரு கிலோ நெல்லை 200 ரூபாவுக்கு விற்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. ஏனென்றால் அதற்குரிய உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதாகக் கூறுகின்றனர்.

உண்மையில் உற்பத்திச் செலவு அதிகரிப்பதாக இருந்தால் அரசாங்க விதை உற்பத்திகளுக்கு மாத்திரமல்ல ஏழை விவசாயிகளுக்கும் அந்த உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கின்றது.

கிட்டத்தட்ட ஓர் ஏக்கர் நெல்வயல் செய்கை பண்ணுவதற்கு ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவு செய்யும் போது இன்றைய நெல்லின் விலை 75- 80ரூபாவுக்கு மேல் தாண்டவில்லை. எனவே இந்த அரசாங்கம் ஆகக்குறைந்தது நெல்லின் விலையை 120 ரூபாவுக்காவது நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாகப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே அவர்கள் அவர்களுடைய நெருக்கடியிலிருந்து மீள்வார்கள். ஒரு கிலோ அரிசி 200 ரூபாவுக்கு விற்கப்படுகின்ற நிலையில். அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லின் விலையை நிர்ணயிக்க முடியாது. அத்துடன் அரிசி ஆலை உரிமையாளர்கள் விலைநிர்ணயத்தில் அழுத்தம் கொடுக்கின்றார்கள். அரசாங்கம், அவர்களது ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கவனத்திலெடுக்க வேண்டும் என்பதுடன் அதற்காக பாடுபட வேண்டும்.

அத்துடன் கடந்த சில வாரங்களாக அதிபர் சேவைக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. ஆந்த அதிபர் சேவை போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது பல்கலைக்கழகப் பட்டம் அத்துடன் பட்டப்பின் கல்விடிப்ளோமா இருக்கவேண்டும். அத்துடன் 5 வருட சேவைக்காலமும் இருக்க வேண்டும். அதைவிடுத்து கல்வியியல் கல்லூரி முடித்தவர்களுக்கு 6 வருட சேவை அனுபவம் இருந்தால் அதற்கு விண்ணப்பிக்க முடியும் என்ற சுற்றறிக்கை இருந்தது.

ஆனால் அந்த கல்வி டிப்ளோமா பட்டம், பட்டப்பின் டிப்ளோமா, விடேதேவைகள் சார் பட்ட பின் கல்வி டிப்ளோமா பெற்றவர்கள் அந்தப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் நேர்முகப் பரீட்சையில் அவர்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றார்கள். இது மிகவும் துரதிஸ்டவசமானது. இலங்கை அதிபர் சேவை தரம் 3 இல் ஆட்சேர்ப்புசெய்வதற்காகபிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இதில் சேவை நிபந்தனை பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பான வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் 2018.10.19 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதில் சேவை நிபந்தனை பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ' இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885ஃ31 மற்றும் 2014.10.22 ஆம் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக்குறிப்பில் இதற்குப் பின்னர் மேற்கொள்ளும் திருத்தங்களுக்கும், அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

இந்த நியமனம் 2023 இலேயே வழங்கப்படவுள்ளது. எனவே பரீட்சை ஏலவே நடைபெற்றிருப்பினும், 2023இற்கு முன்னர் அதிபர் சேவைப் பிரமாணக்குறிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு அமையவே நியமனம் வழங்கப்படல் வேண்டும் என்பது நியதியாகும்.

இதன் அடிப்படையில் 2255ஃ55 ஆம் இலக்க 2021.11.26 ஆம் திகதிய அதி விடே வர்த்தமானி பத்திரிகையில் வெளியாகிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 4ஆவது திருத்தத்தின்படி விசேட தேவைகள் சார் பட்டப்பின் கல்விடிப்ளோமாவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதில் அமுல்படுத்தப்படும் திகதி குறிப்பிடப்படாமையால் இது 2014 ஆம் ஆண்டிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது நியதியாகும்.

மேலும் 2010 இல் விடே தேவைகள் சார் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவானது சாதாரண பட்டப்பின் கல்வி டிப்ளோமாவிற்கு சமமானது என கல்வி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையும் குறிப்பிடுகின்றது.

மேலும் திறந்த பல்கலைக்கழக உபவேந்தராலும் இது தெட்டத்தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடத்தி, அதன் அடிப்படையில் அவர்களையும் இலங்கை அதிபர் சேவைக்கு உள்வாங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பொறுப்புக்கூற வைப்பது யார்?

போர் முடிந்து 14 ஆண்டுகள் கடந்து சென்றபோதும் இலங்கையில் போரின்போதான அத்த மீறல்களுக்குப் பொறுப்புக்கூறப்படவில்லை. அப்படி பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்தாது இலங்கை நீடித்த சமாதானத்தினையும், நேர்மையான நல்லிணக்கத்தையும் அடையமுடியாது என்று எச்சரித்துள்ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்க்கர் ட்ருக். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தனது வாய்மூல அறிக்கையில் நேநற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆணையாளரின் இந்த வாய்மூல அறிக்கையை பிரதி உயர்ஆணையர் நடா அல் நஷீப் ஜெனீவாவில் இன்றைய சபை அமர்வில் வாசித்தார். 2021 நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தின்படி 53ஆவது அமர்வில் ஆணையாளரின் வாய்மூல அறிக்க சமர்ப்பிக்கப்படவேண்டும். அதுவே இன்று அவரது பிரதிநிதியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

பொறுப்புக்கூறல் மற்றும், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான ஜனநாய நிறுவனங்களை மறுசீரமைத்தல் அல்லது புதுப்பித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன்மனித உரிமைகளைபாதுகாக்குமாறும்நாம் சகல தரப்பினரிடத்திலும் கேட்டுக்கொள்கின்றோம். இலங்கையில் தற்காலிக ஆணைக்குழுகள் அதிகளவில் உள்ளன. அவை பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை. முன்பிருந்தே பொறுப்புக்கூறல் பெரும் பிரச்சினையாகவுள்ளது.

பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்படாது விட்டால் இலங்கை சமாதானத்தினையும், நல்லிணக்கத்தையும் அடையமுடியாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை உடனடியாகவே நிராகரித்துள்ள இலங்கை ஆட்சியாளர்கள், இலங்கையின் பிரச்சினையில் வெளித்தலையீட்டை ஏற்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளது. ஆகமொத்தத்தில் மனித உரிமைகள்பேரவைவலியுறுத்தும்பொறுப்புக்கூறலை கொழும்பு இனியும்நடைமுறைப்படுத்தப்போவதில்லை என்பது திண்ணம். எனில் யார்தான் இலங்கையைப் பொறுப்புக்கூற வைப்பது?

இலங்கை கடந்த ஒன்றரை தசாப்த காலமாகவே உள்நாட்டுக்குள் பிரச்சினைக்குத் தீர்வு, உள்ளக விசாரணை, உள்ளப் பொறுப்புக்கூறல் என்று ஏமாற்றி வருகின்றது. அதற்கான நேர்மையான, உண்மையான எந்தவொரு நடவடிக்கையையும் அது எடுக்கவில்லை. பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றுவதற்கான கண்துடைப்பு நகர்வுகள் தவிர்ந்த உருப்படியான ஒரு அடியைக்கூட கொழும்பு இது விடயத்தில் எடுத்து வைக்கவில்லை. தற்போதும் தமிழர் தரப்புடன் – பாதிக்கப்பட்ட தரப்பு – கலந்துரையாடாமல், அந்தத் தரப்பு நிராகரித்திருக்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை உருவாக்கப்போவதாகக் கூறிக்கொண்டிருக்கின்றது.

தமிழர்கள்ஏற்காத அத்தகைய ஆணைக்குழுவால் எந்துப்பயனும்ஏற்படப்போவதில்லைஎன்றபோதும்உலக நாடுகளைச் சமாளிப்பதற்கான ஒரு கண்துடைப்பாக இந்த ஆணைக்குழு தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ந்து பேசி வருகின்றார்கள். இத்தகைய பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அவற்றின் அறிக்கைகள் குப்பைக்குள் தூக்கிக் கடாசப்பட்டுவிட்டன. இந்தப் பின்னணியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை போன்ற அதிகாரமற்ற அமைப்புக்களின் வலியுறுத்தல்களால் மட்டும் இலங்கை பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்ததாது. அப்படியானால் யார்தான் அதைச் செய்வது?

# இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறை தொடர்பாக ஜெனீவாவில் பிரிட்டன் கவலை தெரிவிப்பு

## கருத்துச் சுதந்திரத்தையும் வலியுறுத்தியது



பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்மொழிந்த நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன.

கருத்துசுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை அவை வலியுறுத்தியுள்ளன.

பிரிட்டனின் மனித உரிமைக்கான இராஜதந்திரி ரிட்டா பிரென்ஞ் இதனைத் தெரிவித்துள்ளார் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

நிலங்களை விடுவித்தல் நீண்ட கால தடுத்துவைப்பு மற்றும் ஊழல் ஆகியவை குறித்த கரிசனைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக இலங்கையின் ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை வரவேற்கின்றோம். இலங்கையின் அனைத்து இன மற்றும் மத சமூகத்தினரின் உரிமைகளைபாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக அமையலாம்.

தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவது தொடர்பாக நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தைமாற்றுவதற்குதற்போது நடவடிக்கைகள் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்கின்றோம்,பயங்கரவாத சட்டம் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப காணப்படவேண்டும் என இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

கருத்துசுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை பாதுகாக்குமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லிணக்கத்துக்கான தனது அர்ப்பணிப்பை நோக்கி இலங்கை தனது முதல்கட்ட நடவடிக்கையை எடுக்கின்ற நிலையில் வெளிப்படைத்தன்மை பொறுப்புக்கூறல் அனைவரையும் உள்வாங்கல் போன்றவற்றின் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

நாட்டின் தேர்தல் முறைகள் மீதான மக்களின் நம்பிக்கையை தொடர்ந்துதக்கவைப்பதன்மூலம்அதன் ஸ்தாபனங்கள் ஆணைக்குழுக்களின் சுதந்திரத்தை பேணுவதன் மூலம் இலங்கை தனது பிரதிநித்துவ ஜனநாயகத்தை பேணுவது அவசியம் எனவும் அவை தெரிவித்துள்ளன. (05)

# போராட்டங்கள் தமிழர்களின் உரிமைக்கானவை எல்லாவல மேத்தானந்த தேரருக்கு ஸ்ரீநேசன் பதிலடி

அஹிம்சை வழி, ஆயுத வழி போராட்டங்கள் தமிழர்களின் உரிமைக்கானவை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தமிழர்கள், தமிழ்த் தலைவர்கள் தமக்கான உரிமைகளையே கோருகின்றனர். அவர்கள் சிங்களவர்களதோ ஏனைய மக்களோ உரிமைகளைக் கோரவும் இல்லை; பறிக்க நினைக்கவும் இல்லை. இதனைச் சிங்கள மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். எல்லாவல மேத்தானந்த தேரர் அண்மையில் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். பிரபாகரன் கேட்டதையே தமிழ்த் தலைவர்கள் கேட்கின்றார்கள் என்பதே அக்கருத்தாகும்.

அறவழியில் - அஹிம்சை வழியில் தந்தை செல்வா கேட்டதும், ஆயுதவழியில் விடுதலைப்புலிகளின் தலைவர் கேட்டதும், தற்போது மீண்டும், அறவழியிலும் இராஜதந்திர வழியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஐயா மற்றும் தமிழ்த்தேசியத்தலைவர்கள் கேட்பதும் தமிழ் மக்களின் உரிமைகளைத்தான். ஏனைய மக்களின் உரிமைகளை ஒருபோதும் தமிழ்த் தலைவர்கள் கேட்கவில்லை என்பதை முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினரும் அரசியல்வாதியுமான எல்லாவல மேத்தானந்த தேரர் புரிந்துகொள்ள வேண்டும்.

காலாதி காலமாக தாம் வாழுகின்ற வடக்கு - கிழக்கு தாயக பூமியில், சுயநிர்ணய உரிமையுடன் - சுய கௌரவத்துடன் வாழவே தமிழர்கள் விரும்புகின்றார்கள். இதனைப் புரிந்தும் புரியாதவர்கள் போன்று அரசியல் தேவைக்காகச் சிங்கள மக்களை சிங்கள அரசியல் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றார்கள்.

75 ஆண்டுகளாகத் தமிழ் மக்களை மட்டுமல்லாமல் சிங்கள மக்களையும் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி வந்துள்ளார்கள். எல்லாவல மேத்தானந்த தேரரின்மேலுமோர்கருத்தின்படி வடக்கில் தமிழர்களைக் குடியேற்றும் விடயத்தில் கூட தேரர்கள், சிங்கள அரசியல் தலைவர்களின் அனுமதி இருக்க வேண்டும் என்பதாக அமைந்துள்ளது. அதாவது குருந்தூர் மலையை அண்மித்த 350 இற்கு மேற்பட்ட காணிகளில் தமிழர்களைக் குடியேற்றக் கூடாது என்று ஜனாதிபதியை எச்சரிக்கும் வகையில் எல்லாவல மேத்தானந்த தேரர் தன்னைத்தானே உயர்த்தியுள்ளார்.

தமிழர்களுக்கு என்று பாதுகாப்பு இல்லாத நிலையில் தமிழர்களையும் அவர்களது நிலத்தையும் எதுவும் செய்யலாம் என்ற நிலைமை 2009 இற்குப் பிற்பட்ட சூழல் தோற்றுவித்துள்ளது. இலங்கையின்ஒற்றையாட்சிமுறை, சிங்கள - பௌத்த முதன்மைவாதம், ஆளும் கட்சி - எதிர்க்கட்சிகள் முறைமை, பொலிஸ் துறை, படைத் துறை, புலனாய்வுத்துறை, தொல்லியல் துறை என யாவும் சிங்கள மயமாகி இருத்தல் தமிழ் பேசும் மக்களுக்குப் பெரும் ஆபத்தாக மாறியுள்ளது.

இவை தவிர தலையாட்டும் ஆளும் கட்சிசார் தமிழ் அரசியல் பொம்மைகளின் பதவி சுகம், பண சுகம் என்பனவும், சிறு சலுகைக்கு வாக்களிக்கும் மக்களும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் சிங்கள எதேச்சதிகாரத்துக்கும்,தமிழர் மீதான ஒடுக்குமுறைக்கும் வழிகோலி வருகின்றனர்.

சிங்கள - பௌத்த மயமாக்கலுக்குப் பதவி மோகம் கொண்ட தமிழ்ப்பொம்மை அரசியல்வாதிகள் மௌனம் காப்பது நக்குண்டு நாவிழந்த கதையாகவுள்ளது. - என்றுள்ளது.

# ‘மொட்டு’ இல்லாமல் எந்தவொரு சக்தியாலும் வெல்ல முடியாதாம்

## ரஞ்சித் பண்டார கூறுகின்றார்

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிஇல்லாமல்எந்தவொருகூட்டணியாலும் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார். மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப்படுவார். தேவையேற்படின் கட்சிகள் எம்முடன் இணைந்து கூட்டணி அமைக்கலாம்-என்றும்அவர் கூறினார்.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவையே களமிறக்க வேண்டும் என்று மொட்டுக் கட்சிக்குள் ஒரு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வரவு – செலவுத் திட்டக் காரியாலயம் அமைக்கும் தீர்மானம் சிறந்த ஒன்று

## கபீர் ஹாசிம் வரவேற்பு



பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்டக் காரியாலயத்தை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் இவ்வாறான தன்மை காணப்படுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நிதி ஒழுக்கம், நிதி முகாமைத்துவ வெளிப்படைதன்மை தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

அரசாங்கத்தின் வாக்குறுதிக்கும், செயற்பாட்டுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது.அரச நிதி விவகாரத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன்செயற்பட்டிருந்தால் நாடு வங்குரோத்து நிலை அடைந்திருக்காது.

மோசடி செய்யப்பட்ட அரச நிதி மீண்டும் அரசுடைமையாக்கப்பட வேண்டும்,அரச நிதி விவகாரம் மற்றும் செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை நாட்டு மக்கள் போராட்டம் (அரகலய) ஊடாக முன்வைத்தார்கள்.

நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தை ஸ்தாபிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது. இந்த காரியாலயத்தை அமைக்க 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட கவனம் செலுத்தப்பட்டது இருப்பினும்பல்வேறு காரணிகளால் அந்த முயற்சி தோல்வியடைந்தது.

பாரியபொருளாதாரப்பாதிப்புக்கு மத்தியில் நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது சிறந்தது.

இந்த காரியாலயம் சுயாதீனத்தன்மையுடன் செயற்படுவது அத்தியாவசியமானது. பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் இவ்வாறான முன்னேற்கரமான தன்மை காணப்படுகிறது. நாட்டின் நிதிநிலைதொடர்பான அதிகாரம்நாடாளுமன்றத்துக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்படுகிறது. இருப்பினும் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்தின் ஊடாகமுழுமையாகசெயற்படுத்தப்படுவதில்லை .ஆகவே இவ்விடயம் குறித்தும் எதிர்வரும் காலங்களில் கவனம் செலுத்த வேண்டும். - என்றார். (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# வலி. வடக்கில் காணி சுவீகரிக்கும் வர்த்தமானியை உடன் மீளப்பெறுக

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை தேவையற்றது. அந்தக் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி உடனடியாக முழுமையாக மீளப்பெற வேண்டும். திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரில் செய்ததைப் போன்று வலிகாமம் வடக்கிலும் செய்ய வேண்டும்.

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

வலிகாமம் வடக்கில் 6 ஆயி ரத்து 384 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் வர்த்தமானி 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது. இந்தக் காணிகளில் சில பகுதிகள் நல்லாட்சி அரசின் காலத்தில் விடுவிக்கப்பட்டிருந்தன. விடுவிக்கப்பட்ட காணிகளை அளவீடு செய்து அவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு ஏதுவாக அளவீட்டுப் பணிகள் வலிகாமம் வடக்கில் திங்கட்கிழமை தொடங்கின.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த டிசம்பர் மாதம் மற்றும் அண்மையில் இடம்பெற்ற சந்திப்புக்களில் இந்த விடயம் தொடர்பில் பேசியிருக்கின்றோம். வலிகாமம் வடக்கில் 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து வெளியிட்ட வர்த்தமானியே தவறு. அனைத்துக் காணிகளையும் ஒரே வர்த்தமானியில் சுவீகரிக்க முடியாது. அந்த வர்த்தமானியை மீளப்பெற வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

சம்பூரில் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குரிய வர்த்தமானியை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரே வர்த்தமானியில் மீளப்பெற்றார். அதைப்போன்று வலிகாமம் வடக்கிலும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதனை ஏற்றுக்கொண்டார். அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறு காணி அமைச்சை அறிவுறுத்தியிருந்தார்.



அவர்கள் அவ்வாறு செய்யாமல் விடுவிக்கப்பட்ட காணிகளை மாத்திரம் அளவீடு செய்து அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கின்றனர். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

வலிகாமம் வடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் கூட இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நீதிமன்றமும் அந்த வர்த்தமானியை மீளப்பெறுவதுபற்றிபரிசீலிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவுறுத்தியிருந்தது.

இவை எல்லாவற்றையும் விடுத்துவிடுவிக்கப்பட்டகாணிகளை அளவீடு செய்து அதனை மாத்திரம் வர்த்தமானியில் பிரசுரிப்பதை ஏற்க முடியாது. தவறான வெளியிடப்பட்ட அந்த வர்த்தமானி முழுமையாக மீளப்பெறப்படவேண்டும் - என்றார்.

# நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் விடப்பட்டன







வடமாராட்சி, அம்பன், குடத்தனை, நாகர் கோயில் பிரதேசத்தில் உள்ள குளங்களில் நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரத்தினை வலுப்படுப்படுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று அப்பிரதேச நீர் நிலைகளில் திலாப்பியா மீன் குஞ்சுகள் விடப்பட்டன (113

# கடலில் இறக்கப்பட்டது குமுதினி விரைவில் சேவைக்குத் திரும்பும்

திருத்த வேலைகளுக்காக பல மாதங்களாக வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த குமுதினி படகு திருத்த வேலைகள் முடிவுற்று மீண்டும் கடலில் இறக்கப்பட்டது.

குறிக்காட்டுவான் - நெடுந்தீவு கடல்வழிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் குமுதினி படகு கோளாறு ஏற்பட்டு நடுக்கடலில் தத்தளிக்கும் நிலையை எட்டியதை அடுத்து அதனைத் திருத்துவதற்கான முடிவு வீதி அபிவிருத்தி அதிகார சபையால் எடுக்கப்பட்டது. திருத்த வேலைகளுக்காக வல்வெட்டித் துறை ரேவடி கடற்கரைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சுமார் எழுபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குமுதினியின் திருத்த வேலைகள் தற்போது





முடிக்கப்பட்டுள்ளன. படகு விரைவில் மீண்டும் சேவையில் ஈடுபடவுள்ளது.

திருத்தவேலை முடிந்த படகு பொங்கல்படையல்களைத்தொடர்ந்து செவ்வாய்க்கிழமை மதியம் சம்பிரதாய பூர்வமாக படகின் குறிப்பிட்ட பகுதி கடலுக்குள் இறக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை ரேவடி கடலில் இரு நாட்கள் தரித்து நிற்கும் குமுதினி, தொழில்நுட்ப ரீதியில் சரியாக இயங்குகின்றதா என்கிற சோதனை நடவடிக்கைக்களுக்குப் பின்னர் குறிக்கட்டுவானுக்குக் கொண்டுவரப்பட்டு சேவையைத் தொடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நெடுந்தீவுக்கான போக்கு-வரத்துச் சேவையில் நீண்ட காலமாக ஈடுபட்டுவரும் குமுதினி, 1968 முதல் தனது சேவையைத் தொடர்கின்றது

# சோழர் காலக் கிணற்றில் இருந்து சாவகச்சேரி மக்களுக்கு தண்ணீர்

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள நல்ல தண்ணீர் கிணற்றை சுத்திகரித்து பிரதேச மக்களுக்கும் பயணிகளுக்கும் குடிதண்ணீரை வழங்கு-வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர மத்தியில் காணப்படும் குடிதண்ணீர் பற்றாக்குறை குறித்தும் அங்குள்ள கிணறு குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதையடுத்து செவ்வாய்க்கிழமை குறித்த பகுதிக்கு சென்று நிலமைகளைநேரடியாகஆராய்ந்தார் அமைச்சர், கிணறு தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, அந்தத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உயரதிகாரிகளையும் வரவழைத்து பிரச்சினை தொடரபில் கலந்துரையாடினார். குறித்த கிணறு சோழர்களினால் அமைக்கப்பட்ட சிவன் கோயிலின் மூலஸ்தானத்திற்கானதீர்த்தக் கிணறு என்பது ஆய்வு ரீதியாகஉறுதிப்படுத்தப்பட்டமையினால் தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது.

குறித்த கிணற்றின் கட்டுமானங்களில்பாதிப்பை ஏற்படுத்தாமல்மக்களுக்கான குடிதண்ணீரை வழங்கு-வதற்கு தொல்லியல் திணைக்களத்தினர்சம்மதம் தெரிவித்துள்ளனர். தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) பந்துல ஜீவ, புனர்நிர்மாணப் பொறுப்பதிகாரி ராகினி மற்றும் மேலாய்வு உத்தியோகஸ்தர் தஷி ஆகியோரும் கலந்ததுகொண்டனர்.

# கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா













வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நேற்று சிறப்புற இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண ஆளுனர் பீ.எஸ்.எம். சாள்ஸ் கலந்துகொண்டு புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலையின் பிரதான நூழைவாயிலினை திறந்து வைத்தார். கௌரவ விருந்தினர்களான வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிப்பாளர் லெனின் அறிவழகன், மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் த.இராசரத்தினம் ஆகியோரால் திருவள்ளுவர், பண்டாரவன்னியன் மற்றும் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி மறைந்த கலாநிதி அப்துல்கலாம் ஆகியோரின் சிலைகளும் திறந்து வைக்கப்பட்டன.

இதன்போது சாதாரண தரம், உயர்தரம் மற்றும் விளையாட்டுக்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கான கௌரவிப்புகளும் இடம் பெற்றிருந்தன.

பாடசாலை அதிபர் கோ.குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடாசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(100)

# வவுனியாவில் தீ பிடித்து எரிந்த வீட்டினுள் குடும்பஸ்தரின் சடலம்

வவுனியாவில் தீ பிடித்து எரிந்த வீட்டினுள் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா - தேக்கவத்தை பகுதியில் உள்ள வீடொன்று தீ பிடித்து எரிகின்றது என நேற்றுக் காலை வவுனியா பொலிஸாருக்கும் மாநகர சபை தீயணைப்புப் பிரிவுக்கும் அயலவர்களால் தகவல் வழங்கப்பட்டது.

அதையடுத்துசம்பவஇடத்துக்குவிரைந்ததீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார் வீட்டில் பரவிய தீயை அணைத்து உள்ளே சென்ற போது, அறை ஒன்றினுள் வீட்டில் வசித்த குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சடலத்தை மீட்ட பொலிஸார், உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் சடலத்தை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# டெங்கு நுளம்பு ஒழிப்புக்கு பங்காற்றிய ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்க

## பிரசன்ன ரணதுங்க அரசிடம் வலியுறுத்து



டெங்கு நுளம்பு ஒழிப்புக்கு பெரிதும் பங்காற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தரம் செய்யுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளருமான பிரசன்ன ரணதுங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதியின் செயலணியின் ஊடாகவும் ஆளுநர்களின் தலைமையிலும் மாகாண மட்டத்திலும் டெங்கு நுளம்பு ஒழிப்புக்கான விசேட வேலைத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் விடுத்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவ்வாறானதொரு உரையாடல் இடம்பெற்றது.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ - தற்போது டெங்கு பிரச்சினை மிகவும் பாரதூரமான பிரச்சினையாக மாறியுள்ளது. டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த பயிற்சி பெற்ற குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

டெங்கை கட்டுப்படுத்த முக்கிய பங்காற்றிய அந்தக் குழு நிரந்தரமாக்கப்படவில்லை.

எனவே, இந்த தற்காலிக நியமனங்களைப் பெற்றவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். அப்போது டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை சிறப்பாக செய்ய முடியும்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல - எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தை நான் 100 வீதம் ஏற்றுக்கொள்கிறேன்.

இவர்கள் 2016 இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட குழு. இந்தக் குழுவிற்கு எந்த அடிப்படைத் தகுதியும் இல்லை. இவர்கள் 8 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றனர். இப்போது அடிப்படைத் தகுதிகளைப் பார்க்க முடியாது.

தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும் போது இவர்களுக்கும் வேலை வழங்குவதற்காக மூன்று அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால் அதற்கு உடன்படவில்லை என நிர்வாக சேவை தெரிவித்துள்ளது. அதில் எனக்கு உடன்பாடு இல்லை. இதை நான் கைவிட மாட்டேன்.

இதை மீண்டும் ஒருமுறை அமைச்சரவைக்கு கொண்டு வருகிறேன். தற்போது நாள் ஒன்றுக்கு 700 ரூபா ஊதியமாக வழங்கப்படுகிறது. அவர்கள் செய்யும் வேலையைப் பார்க்கும்போது, இந்த சம்பளத்தில் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ - பொது-வாக நாங்கள் விமர்சனம் செய்கிறோம். ஆனால் சுகாதார அமைச்சரின் சிறந்த நேர்மறையான பதிலுக்கு நாங்கள் அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க - ஜனாதிபதி செயலணியின் தலைமையில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விசேட வேலைத்திட்டத்தை தற்போது முன்னெடுத்து வருகின்றார்கள்.

மேலும் ஆளுநர்களின் தலைமையில் மாகாண மட்டத்தில் ஒரு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மேலும் டெங்கு ஒழிப்பு பணியில் உள்ளூராட்சி அமைப்புகள் பெரும் பங்களிப்பை அளித்து வருகின்றன.

அந்த குழுக்கள் நிரந்தரம் ஆக்கப்படவில்லை. அவர்களின் சேவையை நிரந்தரமாக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம். - என்றார். (05)

# இலங்கை வங்கிகள் அமைப்பு அரசிடம் வேண்டுகோள் விடுப்பு

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் கடன் மீள் அறவிடல் சட்டங்களை மாற்றியமைப்பதற்கு முன்னதாக மாற்றுவழிமுறைகள் தொடர்பாக மத்திய வங்கியின் ஊடாக விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு இலங்கையின் வங்கிகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இக்கட்டமைப்பானது, 'தற்போதைய சூழ்நிலையில் கடனை மீளச்செலுத்த முடியாததன் விளைவாக வணிக மற்றும் கைத்தொழில் துறையினர் முகங்கொடுத்திருக்கும் அழுத்தங்களை சீரமைப்பதை முன்னிறுத்தி செயற்திறன்மிக்கதும், உரியவாறு ஒருங்கிணைக்கப்பட்டதுமான முறையொன்று கையாளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கலந்துரையாடல்களை அரசாங்கம் மத்திய வங்கியின் ஊடாக வர்த்தக வங்கிகளுடன் முன்னெடுப்பது இன்றியமையாததாகும்' என்று அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடனை மீளச்செலுத்தமுடியாமல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் வணிகங்கள், கடன் மீள் அறவீடு தொடர்பான சட்டங்களை மாற்றியமைக்குமாறு வலியுறுத்திவரும் பின்னணியிலேயே இலங்கையின் வங்கிகள் அமைப்பு மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக சுமார் 2 ட்ரில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய கடன்மறுசீரமைப்பு மற்றும் கடன் மீள்செலுத்துகை இடைநிறுத்தம் என்பன மேற்கொள்ளப்பட்ட நிலையில், இவ்வருடத்தின் முதற்காலாண்டில் மீட்சியை நோக்கிய முயற்சிகள் வலுப்பெற்றதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி, மத்திய வங்கி ஒழுங்குபடுத்தல் செயன்முறையின்கீழ் வங்கிக்கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும், மேம்படுத்து-வதற்கும் உதவுவதே தமது பிரதான நோக்கம் என்று சுட்டிக்காட்டியுள்ள அவ்வமைப்பு, இந்நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு வாடிக்கையாளர் வைப்புக்கள் மற்றும் முதலீட்டாளர்கள் அல்லது பங்குதாரர்களின் மூலதனம் ஆகிய-வற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும் என்று குறிப்பிட்டுள்ளது. (05)

# தண்டப்பணம் அதிகரிக்கப்படுமாம் போக்குவரத்து அமைச்சு அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கருத்தில் கொண்டு விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணத்தை அதிகரிக்க நடவடிக்கைஎடுக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய-வன்ன தெரிவித்துள்ளார்.

வாகனம் செலுத்துவதற்கு முன்னர் சாரதியின் உடல் தகுதி மற்றும் மனநிலை ஆகியவற்றை துல்லியமாக பரிசோதிக்கும் இயந்திரம் வெயங்கொடையிலுள்ள தனியார் பயிலுனர் சாரதி பாடசாலை ஒன்றில் பொருத்தப்பட்டுள்ளது. அதனை அவதானிப்பதற்காக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய-வன்ன கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

தற்போது நடைபெற்று வரும் பரிசோதனைகள் மட்டுமன்றி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஓட்டுநர்களின் உடல் நலம் மற்றும் மன நிலையை அளவிடும் முறையிலும் நாங்கள் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

நாளுக்குநாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கருத்தில் கொண்டு விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக அபராதத்தை மேலும் அதிகரிப்பது, தண்டனையை அதிகரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. -என்றார். (05)

# ஆட்சியை அசௌகரியப்படுத்தும் அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை

## மஹிந்த அமரவீர புதுத் திட்டம் வகுப்பு



நாட்டில் தேவையான அளவு உரம் கையிருப்பில் இருக்கின்றன. விவசாயிகளுக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக் கொடுக்கத் தவறும் அதிகாரிகளுக்கு எதிராக எந்தவித தராதரமும் பார்க்காமல் சட்ட நடவடிக்கை எடுப்போம் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகையில் -

80 ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்யப்படும் போது அரிசி ஒரு கிலோ 200 ரூபா மற்றும் 220 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் -; என்றார்.

அதற்கு அமைச்சர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

லுனுகம்வெஹெர பகுதியில் வீதிக்கு அருகில் 5 கிலோ அரிசி பொதிகள் கிலோ 125 -130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் நீண்டகாலமாகக் கடைகளுக்கு செல்வதில்லை என்பது இதன் மூலம் தெரிகிறது.

நாட்டில் பெருமளவு மக்கள் நாட்டரிசி மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஆகிய-வற்றையே உணவுக்காகக் கொள்வனவு செய்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிக்கும் வகையில் அந்த அரிசி வகைகள் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதில்லை.

குறைந்த விலையில் அவற்றை சந்தையில் பெற்றுக் கொள்ள முடியும். வெகு தூரம் செல்ல முடியாவிட்டால் சதொச நிறுவனங்களில் அவற்றைக் கொள்வனவு செய்யலாம்.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிக்கும் வகையில் நாட்டில் எங்கும் எம். ஓ.பி உரம் தட்டுப்பாடு கிடையாது. அவ்வாறு காணப்பட்டால் உடனடியாக அவற்றை வழங்க முடியும்.

சில அதிகாரிகள் அரசாங்கத்தை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கு-வதற்காக திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர்.

அவர்கள் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுடன் செயற்பட்டு வருகின்றன.

அவர்கள் அந்த உரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றனர். அவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் 40 ஆயிரம் ரூபாவுக்கு மேல் கடந்த காலங்களில் விற்பனை செய்யப்பட்ட யூரியா உரம் தற்போது விவசாயிகளுக்கு 9 ஆயிரம் ரூபாவுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகிறது.

அதேபோன்று எம் ஓ பி உரமும் 4,500 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த உரங்கள் தேவையான அளவு கையிருப்பில் உள்ளன. - என்றார். (05)

# உயர்தர மாணவர்களுக்கு ஆங்கிலபாட கருத்தரங்கு

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் பிரதான பாடங்களில் ஒன்றாக மாணவர்கள் தெரிவு செய்யக்கூடிய ஆங்கில பாடம் (பாட இலக்கம்: 73) (ஆங்கில இலக்கியம் என்றும் சொல்லப்படும் பாடம்; பொது ஆங்கிலம் அல்ல) தொடர்பாக வட மாகாணத்திலே கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியிலே அறிவூட்டலினை வழங்கும் வகையிலான கருத்தரங்கு ஒன்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினர் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் ஜீன் 24, சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் புதிய பரீட்சை மண்டபத்திலே இடம்பெறும். 2023, 2024, 2025 ஆகிய வருடங்களிலே இடம்பெறவிருக்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளிலே ஆங்கில பாடத்த்துக்கு (பொது ஆங்கிலம் அல்ல) தோற்றவிருக்கும் மாணவர்கள், தற்போது தரம் 10 மற்றும் தரம் 11இலே கல்வி பயிலும், எதிர்காலத்திலே உயர்தரத்தில் ஆங்கிலப் பாடத்தினைத் தமது பிரதான பாடங்களிலே ஒன்றாகத் தெரிவு செய்ய விரும்பும் மாணவர்கள் அல்லது இந்தப் பாடம் தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள், உயர்தர வகுப்பு ஆங்கிலப் பாடத்திலே ஆர்வமாக இருக்கும் ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர் போன்றோர் இந்தக் கருத்தரங்கிலே பங்கேற்கமுடியும்.

இந்த நிகழ்விலே பங்குபற்றும்படி ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோரினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினர் அழைத்துள்ளனர்.

# சுற்றுலா, விருந்தோம்பல் டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படவுள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத் துவ டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த ஒரு வருட காலக் கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஜூன் 28. கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து ஒரு வருடகால துறைசார் அனுபவமுடைய எவரும் இக்கற்றை நெறிக்காக விண்ணப்பிக்க முடியும் என்றும், விண்ணப்பிக்க விரும்புபவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் சி.சிவேசன் அறிவித்துள்ளார்.

# தந்தையும் மகனும் விபத்தில் இறப்பு

வாகன விபத்தில் தந்தையும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு, பாதுக்கை பிரதேசத்தில் செவ்வாயிரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதால் விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய தந்தையும், 10 வயதுடைய மகனும் இந்தக் கோர விபத்தில் சாவடைந்துள்ளனர்.

பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மகனை மோட்டார் சைக்கிளில் தந்தை ஏற்றிக்கொண்டு வீட்டுக்குப் பயணித்த வேளையிலேயே கோர விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த 10 வயது சிறுவன் இவ்வருடம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புக்குச் சென்றிருந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஹயஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்-துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரூ. 10 லட்சம் நகை திருட்டு வழக்குகளில் வவுனியாவில் 21 வயது இளைஞன் கைது

வவுனியா, சூசைப் பிள்ளையார்குளம் பகுதியைச்சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள இரண்டு வீடுகளில் 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மற்றும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை திருடினார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளை திருடியமை, வவுனியா, மில் வீதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் கோயில் உண்டியல் உடைத்து பணம் திருடியமை மற்றும் ஒலிபெருக்கி திருடியமை ஆகிய குற்றங்களுக்காகவும் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலி-ஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா, சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்தவரான சந்தேகநபர் கைதுசெய்-யப்பட்டார். அவரிடம் இருந்து 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு நகைகள் அடைவு வைக்கப்பட்ட ரசீதுகள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் அடிப்படையில் அந்த நகைகள் மீட்கப்பட்டன. ஆலய ஒலிபெருக்கியும் மீட்கப்பட்டது என்று பொலி-ஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலி-ஸார் தெரிவித்தனர். (100)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

# வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தொல்பொருள் மரபுரிமைகள் யுனெஸ்கோ கண்காணிப்பில் ஆய்வு செய்யப்படவேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து



குருந்தூர் மலை பகுதியில் தமிழர்கள் வாழவில்லை என்று தொல்பொருள் சக்கரவர்த்தி என்று குறிப்பிட்டுக் கொள்ளும் எல்லாவெல மேதானந்த தேரரின் கருத்து இனவாதம் மற்றும் மதவாதத்தை அடிப்படையாகக் கொண்டது.

சிங்கள பேரினவாதம் தயாரித்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை அறிக்கைகளை ஏற்க முடியாது.

யுனெஸ்கோவின் நேரடி கண்காணிப்பின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகள் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையவை வருமாறு -

ஆட்சியாளர்கள் மத்தியில் சிறந்த அர்த்தபூர்மான மாற்றம் ஒன்று ஏற்படாத வரை இந்த நாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது. இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு. தமிழ், முஸ்லிம், மக்களின் தனித்துவ அடையாளங்களை அழித்து சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கி இன, மத வெறி ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி செயற்படுவது சிறந்த எடுத்துக்காட்டு அல்ல.

இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இழுபறி நிலையில் உள்ள நிலையில் பூகோள ஆதிக்க சக்திகள் தமது குறுகிய நோக்கங்களை இலங்கை ஊடாக செயற்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன. வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற நாடாளுமன்றத்தின் ஊடாக சட்டங்கள் இயற்றப்படவுள்ளன.

இனவாத இலட்சியங்கள் கொண்ட ஒற்றையாட்சி அரசமைப்பு முறையைமை இல்லாதொழித்து தமிழ்த் தேசியத்தின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் அரசியல் யாப்பு முறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இனவாத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளின் ஊடாக இனவாத செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. தொல்பொருள் சக்கரவர்த்தி என குறிப்பிடப்படும் எல்லாவெல மேதானந்த தேரர் கடும் இனவாதி. குருந்தூர் மலை பகுதியில் தமிழர்கள் வாழவில்லை ஆகவே காணிகளை தமிழர்களுக்கு வழங்க கூடாது என ஜனாதிபதிக்கு அவர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

குருந்தூர் மலை பகுதியில் தமிழர்கள் வாழவில்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முல்லைத்தீவு, மணலாறு பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழர்கள் தமது சொந்த காணிகளில் மீள் குடியேற முடியாத அளவுக்கு சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

குருந்தூர் மலை பகுதி ஆங்கிலேயர் காலத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட போது வர்த்தமானியில் குருந்தூர் காடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்த விதத்திலும் பௌத்தம் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் தற்போது குருந்தூர் மலை தொடர்பில் வெள்ளையர்கள் வெளியிட்ட வர்த்தமானியையும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகின்றார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடும்போக்கு பௌத்த கொள்கைகள் கொண்ட தரப்பினரால் அறிக்கையிடப்பட்ட தொல்பொருள் அறிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. யுனெஸ்கோவின் நேரடி கண்காணிப்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் மீள ஆய்வு செய்யப்பட வேண்டும். - என்றார். (05)

# பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிராக அரச திணைக்களங்களில் நடவடிக்கை

## விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு



இலஞ்ச - ஊழல் ஆணைக்குழு தொடர்பான புதிய சட்டமூலம் நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பழைய சட்டத்தில் காணப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டே இந்தப் புதியச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க தான், இலஞ்ச - ஊழல் ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவரவுள்ளதாக விமர்சிக்கப்பட்டது.

இது தவறான கருத்தாகும். நீண்ட நாள்களாக நடைமுறையில் இருக்கும் சட்டமூலம் தொடர்பாக மக்கள் மத்தியில் பல்வேறு விமர்சனங்கள் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டுதான் நாம் இந்த புதிய இலஞ்ச - ஊழல் ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தைத் தயாரித்துள்ளோம்.

ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் வகையில், ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட பதவிகள் அனைத்தும், அரசமைப்பு பேரவைக்கு இணங்கத் தான் நியமிக்கப்படும்.

ஓய்வுபெற்ற நீதிபதிகள், பொலிஸாரை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிப்பதால், சட்டமூலத்தின் ஊடாக எதிர்ப்பார்த்த பலன் கிடைக்காது என்பதை நாம் அனுபவங்கள் ஊடாகக் கண்டுள்ளோம்.

எனவே, 62 வயதுக்கு மேற்படாத, குறித்த விடயதானத்தில் அனுபவமும் நிபுணத்துவம் வாய்ந்த நபர்களைதான் ஆணைக்குழுவுக்கு நியமிக்கவுள்ளோம்.

மேலும், ஜனாதிபதி முதல் ஆணைக்குழுக்களின் தலைவர்கள், தூதுவர்கள், ஆளுநர்கள், மாகாண முதல்வர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் என அனைவரும் தங்களின் சொத்துப் பட்டியலை உறுதிப்படுத்த வேண்டும் என்ற சரத்தும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்த பட்டியலை வெளியிட வேண்டும். ஓய்வு பெற்றாலும், இரண்டு வருடங்களுக்கு சொத்துக்களின் விவரங்களை வெளியிட வேண்டும்.

அதேநேரம், அரச திணைக்களங்களில் பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

இந்தக் குற்றத்துக்கு எதிராகவும் இந்த புதிய சட்டமூலத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# ஊடகங்கள் தொடர்பான புதிய சட்டமூலத்தை எதிர்க்கவில்லை

## டளஸ் அழகப்பெரும பகிரங்கம்



ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படும் சட்டங்களை முன்னுதாரணமாகக் கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -எதிர்க்கட்சித் தலைவர் கூறுவதைப் போன்று இந்த விடயத்தில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச நாடுகளில் இருப்பதைப் போன்று, ஊடக ஒழுங்குமுறை அவசியம் என்பதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

1997 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசர் உள்ளிட்ட மூவர் அடங்கிய நிதிபதிகள் குழாமினர், இந்த ஊடக சட்டங்கள் தொடர்பாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்பொன்றை வழங்கியுள்ளனர்.

அதாவது, இவ்வாறான சட்டமூலங்களை நிறைவேற்ற நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்பதோடு, சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீதி அமைச்சரும் அறிவார் என்று நாம் நம்புகிறோம். இவ்வாறான சட்ட-மூலமொன்று தேவையில்லை என்று இங்கு யாரும் கூறவில்லை.

ஆனால், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நிச்சயமாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

நவீன ஊடகங்களுக்கு இவ்வாறான நெறிமுறைகள் அவசியம். வளர்ச்சியடைந்த, ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படும் சட்டங்களை முன்னுதாரணமாகக் கொண்டு இந்த விடயத்தில் அரசாங்கம் செயற்பட வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# இலங்கையில் முதன்முறையாக திருநங்கைகளுக்கு எய்ட்ஸ் தொற்று

இலங்கையில் முதன்முறையாக எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 9 திருநங்கைகள் இனம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 9 திருநங்கைகள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும், இவ்வாண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் மொத்தமாக 165 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவான அதிகபட்சமான தொற்றாளர்களின் எண்ணிக்கை இது எனவும், அதிகமான வழக்குகள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த 2021 ஆம் ஆண்டை விட 2022 இல் பதிவான வழக்குகளில் 43 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தேசிய பாலியல் நோய் எயிட்ஸ் தடுப்பு வேலைத் திட்டமத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி விதானபத்திரன, 'மாணவர்களுக்கு பாலியல் கல்வியை முறையாக வழங்குவது அவசியம் எனவும், மக்கள் எச்.ஐ.வியைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆணுறையைப் பயன்படுத்துவது அவசியம். - எனவும் தெரிவித்துள்ளார். (05)

# ஒருபோதும் அடக்கு முறைக்கு ஊடகங்கள் உட்படுத்தப்படா

## அமைச்சர் மனுஷ நாணயக்கார திட்டவட்டம்

அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் செயற்படும் என தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதேநேரம், சரியான தகவல்களை மக்கள் பெற்றுக்கொள்ளும் உரிமையும் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இரண்டு விடயங்களையும் முன்னிலைப்படுத்தியே நாம் இந்த சட்டமூலத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த சட்டமூலத்தின் ஊடாக, ஊடகங்கள் ஒருபோதும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட மாட்டா.

யாரேனும், பிழையான தகவல்களை வழங்கினால், அதற்கான ஒரு நெறிமுறையை கொண்டு வருவதற்கே நாம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த சட்டமூலத்தைக் கொண்டுவர கடந்த காலங்களிலும் ஆராயப்பட்டது. 1997 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அந்தவகையில், உயர்நீதிமன்ற தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தும் வகையிலான சரத்துக்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விடயம் தொடர்பாக அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடவும் தயாராகவே உள்ளோம். -என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# வெளிநாட்டில் மறைத்து வைத்த பணத்தை எப்படி திருப்பி நாட்டுக்கு கொண்டு வருவது?

## பீரிஸ் கேள்விக்கணை



பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் காரணமாக வெளிநாட்டு வங்கிகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பணத்தை மீளநாட்டுக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் புதிய சட்டமூலத்தில் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாரியளவிலான மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெறும் பட்சத்தில் அந்தப் பணம் வெளிநாட்டு வங்கிகளில் முதலீடு செய்யப்படுகின்றன எனவும், அந்தப் பணத்தை மீண்டும் நாட்டுக்கு பெற்றுக் கொடுப்பதே முதன்மையான தேவை எனவும் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதனை இலங்கை தனித்து செய்ய முடியாது எனவும், அதற்காக சர்வதேச அமைப்புகளுடன் கைகோர்க்க வேண்டும் எனவும் துரதிர்ஷ்டவசமாக ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் இலங்கையை சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகளுடன் இணைக்கும் எந்தவொரு பிரிவும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சட்டத்துக்குத் தேவையான பலத்தை அளிக்கும் வகையில், சர்வதேச அமைப்புகளின் ஆதரவைப் பெற்று அதற்குரிய ஏற்பாடுகளைச் சேர்க்க வேண்டும் என்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (05)

# முடங்கியது நுவரெலியா

நுவரெலியா தபால் நிலையத்தை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து நுவரெலியாவில் பெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நுவரெலியாவிற்கு அடையாள சின்னமாக கடந்த 130 வருடங்களுக்கு மேலாக உள்ள நுவரெலியா தபால் நிலையத்தை இலங்கையின் முதன்மை சுற்றுலா ஊக்குவிப்பு நிறுவனமான ஜெட்வின் நிறுவனத்திடம் ஒப்படைக்க யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (புதன்கிழமை) நுவரெலியா பிரதான தபால் நிலையத்தைச் சுற்றி கறுப்பு கொடி கட்டி தபால் நிலையத்துக்கு முன்பாக தபால் ஊழியர்களும் பொது மக்களும் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் இந்த போராட்டத்தில் இலங்கை தபால் அதிகாரி சங்கம் , இலங்கை தபால் ஊழியர்கள் சங்கம் ,அகில இலங்கை தபால் தந்தி ஊழியர்கள் சங்கம் மற்றும் தபால் மற்றும் தொலைத்தொடர்பு சங்கங்கள் இணைந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



# வடக்கிற்கான ரயில் சேவை தொடர்பான விசேட அறிவிப்பு

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



வடக்கு ரயில் மார்க்கத்தை மேம்படுத்த மேலும் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்க இந்திய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி, கொழும்பு மற்றும் காங்கேசன்துறை இடையில் ரயில் கடவைகளில் உள்ள சமிக்ஞை அமைப்பை நவீனமயமாக்குவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மார்க்கத்தில் ரயில் சேவைகள் தற்போது அநுராதபுரம் ரயில் நிலையத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த பாதையை நவீனப்படுத்துவதற்கு வசதியாக கொழும்பில் - காங்கேசன்துறைக்கான சேவைகள் இந்த வருடம் ஜனவரி மாதம் இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் இந்தியாவால் நீடிக்கப்பட்ட கடன் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்த பணிகள் இம்மாதத்தில் முடிவடைய இருந்தபோதிலும் பல்வேறு காரணங்களால் தாமதமாகி வருகிறது.

இதேவேளை, கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பயண நேரத்தை ஒன்றரை மணி நேரத்தால் குறைக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (05)

# அரச திணைக்களங்களில் வீண்விரயங்கள் அதிகரிப்பு

## பிரதமர் தகவல்



திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வீண் விரயங்கள் காணப்படுவதாகவும் இது நாட்டுக்கு பாரிய பிரச்சினை என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இந்த வீண் விரயங்களை கட்டுப்படுத்த முன்னுரிமையளித்து செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வீண் விரயங்களை குறைத்துக் கொள்வதே எமது இலக்காகும். அதனை முக்கியமான இலக்காகக் கொண்டு அதற்கு முன்னுரிமையளித்து நாம் செயற்படவேண்டியது அவசியமாகும்.

யார் என்ன சொன்னாலும் திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் வீண் விரயங்கள் கிடையாது என எவராலும் கூற முடியாது. இது நாம் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினையாகும்.

சில புள்ளி விவரங்களில் காணப்படும் பிழைகள் மற்றும் அதிலிருந்து திசை திருப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மோசடிகள் குறிப்பிடத்தக்கவை.

இவ்வாறான மோசடிக்காரர்களின் சுமையையும் இறுதியில் திறைசேரி அல்லது நாடாளுமன்றத்துக்கே பொறுப்பேற்க வேண்டியுள்ளது. அது பொது மக்களுக்கான பாரிய பாதிப்புகளுக்கே வழிவகுக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# இசை நிகழ்ச்சிகள் நடத்துவது தொடர்பில் விசேட அறிவிப்பு!

இசை நிகழ்ச்சிகளுக்கான நேரக்கட்டுப்பாடுகள் திருத்தப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட உத்தரவை மேற்கோள் இட்டு அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த பதிவில் ' இதுவரைகாலமும் இசைநிகழ்ச்சிகளை முடிப்பதற்கான நேர அளவு பி.ப 10. 30 ஆக இருந்து வந்தது.

இந்நிலையில் குறித்த கால அளவில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இசை நிகழ்ச்சிகளை முடிப்பதற்கான நேரக் கட்டுப்பாடுகள் அதிகாலை ஒரு மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் ஞாயிற்றுக்கிழமைகளில், இசை மற்றும் பிற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நள்ளிரவு 12.30 மணி வரை நடத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இசை நிகழ்ச்சி நடைபெறும் இடம் வைத்தியசாலைகள் மற்றும் மத ஸ்தலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இடைவெளி பேணப்பட வேண்டும் என்றும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (05)



# கழிவுக் குளிக்குள்ளே சிக்குண்டார் ரணில்

## தலதா அத்துகொரல சாட்டை



நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள இலஞ்ச-ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தில், பெண்களுக்கு எதிரான பாலியல் இலஞ்சத்திற்கு எதிரான சரத்துக்களையும் சேர்க்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகொரல வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கம் கொண்டுவரும் சிறந்த சட்டமூலங்களுக்கு நாம் என்றும் ஆதரவை வழங்குவோம்.

நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இலஞ்ச- ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து நாம் மிகுந்த எதிர்ப்பார்ப்புடன் இருக்கிறோம்.

இந்த சட்டமூலத்தை மேலும் பலப்படுத்த எம்மால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவோம்.

இந்த சட்ட மூலத்தில், பெண்களுக்கு எதிரான பாலியல் இலஞ்சத்துக்கு எதிரான சரத்துக்கள் சேர்க்கப்படவில்லை. ஒரு பெண் என்ற ரீதியில் இந்த சரத்தையும் சேர்க்க வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுக்கிறோம். நாட்டின் நன்மைக்காக நாம் அரசாங்கத்தின் சிறந்த செய்றபாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவோம். இதில் பிரச்சினையில்லை.

எமக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பாக எந்தவொரு முரண்பாடும் கிடையாது. ஆனால், அவரை சூழ உள்ள குழுவினர் குறித்துதான் எமக்கு பிரச்சினை உள்ளது. அவர் ஒரு கழிவுக் குழியில்தான் தற்போது சிக்குண்டுள்ளார். இதுதான் எமக்குள்ள பிரச்சினையே' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஜப்பானின் மிகப்பெரிய சுற்றுலா நடத்துநர்களுடன் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்திப்பு!





டோக்கியோவில் உள்ள இலங்கை தூதரகத்தில் ஜப்பானின் மிகப்பெரிய சுற்றுலா நடத்துநர்களுடன் விரிவான கலந்துரையாடல்களை இ.தொ. கா. தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் மேற்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜப்பானியர்கள் இலங்கையில் பார்வையிடாத இடங்களை ஊக்குவிக்க கிழக்கு மாகாணம் மற்றும் மலையகம் ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் தனிப்பட்ட அனுபவத்தைப் பெறுவதற்காக வருமாறு செந்தில் தொண்டமானால் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜப்பான் நாட்டில் உள்ள ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் தலைவர், ஜப்பானுக்கான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஜி.எஸ்.ஏ. பணிப்பாளர் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் பார்வையிடுவதற்காக சில சுற்றுலா தளங்களை செந்தில் தொண்டமான் பரிந்துரை செய்தார்.

கிழக்கு மாகாணம் - டால்பின்கள் மற்றும் திமிங்கலங்களைப் பார்வையிடுவது, சர்ஃபிங், ஸ்கூபா டைவிங், பவளப்பாறை படகு சவாரி, வனவிலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம், மான் நகரம், தொல்லியல் மற்றும் கலாசார தளங்கள், இயற்கை சுற்றுலா தளங்கள்

மலையகம் - மலை காட்சிகள், மலையேற்றம் மற்றும் முகாமிடுதல், தேயிலை தொழிற்சாலைகள், உலக முடிவு இயற்கை சுற்றுலா தளம், ஒன்பது வளைவு பாலம், லிப்டன் சீட், நக்கிள்ஸ் மலைத்தொடர்

செந்தில் தொண்டமானின் பரிந்துரைக்கு அமைவாக, ஜப்பானின் சுற்றுலா நடத்துநர்கள் எதிர்வரும் நாள்களில் இலங்கைக்கு வருகை தருவதாக ஒப்புதல் அளித்ததுடன், இலங்கை சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக தமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவதாகத் தெரிவித்தனர். (05)

# தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் கிராமங்கள் மீள்குடியேற்றப்படவேண்டும்

## முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய பகுதிகள் மீள்குடியேற்றப்படவேண்டும் என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தண்ணிமுறிப்பு, ஆண்டான் குளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984 ஆம் ஆண்டு தமது பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தனர். இந் நிலையில் இவ்வாறு இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் இதுவரையில் அவர்களது பகுதிகளில் மீள்குடியமர்த்தப்படவில்லை.

இவ்வாறான சூழலிலேயே தண்ணிமுறிப்புப் பகுதியில் உள்ள குருந்தூர் மலை ஆக்கிரமிக்கப்பட்டு, அங்கு பாரிய பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதுடன், குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய விவசாய நிலங்கள் பலவும் தொல்லியல் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இத்தகைய கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலே நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றில் நிலுவையிலுள்ள நிலையில், முல்லைத்தீவு பொலீஸாரோ, தொல்லியல் திணைக்களமோ அல்லது, பௌத்த பிக்குகளோ நீதிமன்றை மதிப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் தரப்புகளான நாம்தான் நீதிமன்றத்தினதும், நீதிபதியினதும் கட்டளைகளை மதித்து நடக்கின்றோம்.

இந்நிலையில் கொழும்பிலே இருக்கவேண்டிய, கொழும்பைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இனவாதத்தைத் தூண்டும் விதமாக குருந்தூர் மலைக்கு வருகைதருவதும், பார்வையிடுவதுமாகச் செயற்படுகின்றார்கள்.

தெற்கிலே தமது வாக்குவங்கியைப் பலப்படுத்துவதற்காகவே சில இனவாத அரசியல்வாதிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

குருந்தூர்மலையை அண்டிய பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரிய 306 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்குடன் தொல்லியல் திணைக்களம் செயற்படுகின்றது.

இந் நிலையில் இந்த குருந்தூர்மலையை அண்டிய காணிவிடயம் தொடர்பாக அண்மையில் எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியிருந்தனர். அப்போது ஜனாதிபதி இந்தக் காணிகளை விடுவிக்குமாறு உரியவர்களுடன் பேசியிருந்தபோதும் தொல்லியல் திணைக்களத்தினர் தொடர்ந்தும் அபகரிப்புச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தக் காணிகள் அனைத்தும் எமது தமிழ் மக்களுடைய வாழ்வாதார விவசாயக் காணிகளாகும்.

இவ்வாறான காணிகளை அபகரித்து இங்கு பௌத்தவிகாரைகளை அமைத்து, சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகள் இங்கு முனைப்புப்பெற்றுவருகின்றன.

இவ்வாறான சிங்களமயமாக்கல் செயற்பாடுகளுக்கெதிராகவும், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கெதிராகவும் நாம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்போது பௌத்த வழிபாடுகளுக்கு எம்மால் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாக பௌத்த பிக்குகளால் எம்மீது வழக்குத் தொடரப்படுகின்றது.

அத்தோடு தொல்லியல் திணைக்களத்தினர் தமது செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக எம்மீது வழக்குத் தொடர்கின்றனர்.

இந்நிலையில் தமது காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களமக்களுக்கு வழங்கப்பட்டுவிடுமோ என எமது தமிழ்மக்கள் அங்கலாய்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் இவ்வாறான சில பெரும்பாண்மையின இனவாத அரசியல்வாதிகள் தமது வாக்கு வங்கியை நிரப்பும் நோக்குடனேயே இங்கு வருகைதருகின்றனர். இந் நிலையில் இவ்வாறான பெரும்பாண்மையின இனவாத அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எமது நோக்கமல்ல. எமது தமிழ்மக்களின் காணிகள் விடுவிக் கப்படவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். தமிழர்களின் பூர்வீக பகுதிகளான தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்கள் மீள்குடியேற்றப்படவேண்டும். எமது தமிழ்மக்களுடைய காணிகள் பறிக்கப்படாமல் எமது மக்களிடமே அவை கையளிக்கப்படவேண்டும் - என்றார். (05)

# சம்மாந்துறை - கல்முனை பிரதான வீதியில் விபத்து!





சம்மாந்துறை - கல்முனை பிரதான வீதியில் நேற்று (புதன்கிழமை) காலை விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. கதிர்காமத்தில் இருந்து சம்மாந்துறை ஊடாக மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றே இவ்வாறு வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் சாரதி உட்பட 10 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இலங்கைக் கடற்படை கைதுசெய்துள்ள இராமேஸ்வர மீனவர்களை விடுவிக்குக

## வைகோ அறிக்கை

19.06.2023 அன்று இராமேஸ்வரம் ஜெட்டி கடற்கரையிலிருந்து 558 விசைப்படகுகள் மீன்பிடி அனுமதிச் சீட்டுப் பெற்று, மீன் பிடிக்க கடலில் சென்றது.

அப்போது தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஆரோக்கியதாஸ் தஃபெ. செபாஸ்டியன் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகில் பழுது ஏற்பட்டு, நெடுந்தீவு கடற்கரையில் நின்றுவிட்டது.

அந்தப் படகில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்து, நெடுந்தீவில் வைத்துள்ளது. அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி, அவர்களை சிறையில் தள்ளவும் இலங்கைக் கடற்படை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

விசைப்படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கரை ஒதுங்கிய படகில் இருந்த மீனவர்களை மனிதநேய அடிப்படையில் கைது நடவடிக்கை எடுக்காமல் அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தோணி ஜான்சன், சேசுராஜ், மரிய ரூபன், முத்து, அந்தோணி பிரபு, லெனின், ஜேக்கப், ஜேம்ஸ் பிரதீப், அந்தோணி ஆகிய ஒன்பது மீனவர்களையும் கருணை அடிப்படையில் விடுதலை செய்யுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். - என்றுள்ளது. (05)

# ஹற்றனில் உள்ள தேயிலை மலையில் சுற்றித்திரிந்த காட்டெருமையை வேட்டையாடிய இருவர் கைது!

தேயிலை மலையில் சுற்றிதிரிந்த காட்டெருமையை வேட்டையாடி, இறைச்சியை விற்பனை செய்வதற்கு முற்பட்ட இருவர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்ட, என்.சி பிரிவிலேயே காட்டெருமை வேட்டையாடப்பட்டு, இறைச்சி பொதியிடப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் இருந்துள்ளது.

சந்தேக நபர்கள் கைதாகும்போது அவர்களிடம் 54 கிலோ இறைச்சி இருந்துள்ளது. ஏனையவை தோட்டமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இறைச்சி மருத்துவ பரிசோதனைக்காக சுகாதார கால்நடை வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் ஹற்றன் போடைஸ் தோட்டத்தை சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர். (05)

# சர்வதேச யோகா தின விழிப்புணர்வு நடைபவனி










சர்வதேசயோகா தினத்தையொட்டி திருமலைவளாககிழக்குபல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக துணைத் தலைவர் திருமதி சந்திரவதனி ஜி.தேவதாசன் தலைமையில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவதிணைக்களத்திற்கு முன்னால் நேற்று காலை 7.45 மணிக்கு ஆரம்பமான இந்த நடைபவனி தபாலக சந்தி வீதி வழியாகச் சென்று திருகோணமலை நகரசபைக்கு முன்னால் முடிவுற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள் மாகாண ஆணையாளர்வைத்தியகலாநிதிதிருமதி இ.ஸ்ரீஊணதர், கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீட விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்டசித்தமருத்துவபீடமாணவர்கள் என பலரும் கலந்துசிறப்பித்தனர். (05)

# மாட்டிறைச்சி சாப்பிடுவது குறித்து முக்கிய தீர்மானம்



கல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள் பணிமனையில் உணவிற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு உழ்ஹிய்யா வழங்குவதற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் தீர்மானிப்பதற்கான விசேட கலந்துரையாடல்செவ்வாய்க்கிழமைசுகாதார வைத்திய அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

கல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஆடு, மாடுகளை அறுப்பதற்கான விசேட பொறிமுறைகளை வகுத்து செயற்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தத்தமது பிரதேசங்களில் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய் பரவலின் தன்மை மற்றும் ஏனையசுகாதாரநடைமுறைகளைகவனத்திற்கொண்டு உலமா சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்புடன் விசேட தீர்மானங்களை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் அவர்களால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதுடன் மாறாக அனுமதி பெறப்படாமல் நோய்வாய்ப்பட்ட மாடு களை அறுப்பவர்களுக்கு அதிகபட்ச சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (05)

# நடாஷா எதிரிசூரிய மறியல் நீடிப்பு புருனோ திவாகராவிற்கு பிணை

நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவை எதிர்வரும் ஜூலை மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நடாா எதிரிசூரியவின் வீடியோவை வெளியிட்ட புருனோ திவாகரா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இருவரும் நேற்று (புதன்கிழமை) கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (05)

# மஹிந்த கஹந்தகமவின் விளக்கமறியலில் நீடிப்பு

கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் மஹிந்த கஹந்தகம கைது செய்யப்பட்ட நிலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தனிநபர் ஒருவரிடம் வீடு தருவதாக 700 கோடி ரூபா மோசடி செய்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# அஸ்வெஸ்ம நலன்புரி திட்டம் தொடர்பாக விசேட அறிவிப்பு

அஸ்வெஸ்ம நலன்புரி திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நலன்புரி திட்டத்தின் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான பயனாளிகளின் பெயர் பட்டியல் இம்மாதம் 20 ஆம் திகதியிலிருந்து பகிரங்கமாக வெளியிடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நலன்புரி நன்மைகள் சபையின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் ' குறித்த பெயர்ப் பட்டியலை சிங்களம், தமிழ் மற் றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதேச செயலகப்பிரிவு மற்றும் கிராம மட்டத்தில் உள்ள ஏனைய அரச அலுவலகங்களிலும் இப்பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# வேகமாகப் பரவுகின்றது தோல் நோய்; சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை



வடமேல்மாகாணத்தில்கால்நடைகளுக்கு பரவி வரும் தோல் நோய், மத்திய மாகாணத்தில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கால் நடைகளுக்கும் தற்போது வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து ஏனைய பிரதேசங்களுக்கு கால்நடைகளை கொண்டு செல்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை மற்றும் கலேவெல கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு, நுவரெலியா மாவட்டத்தில் ராகலை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு, ஹரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய உடுநுவர குவாட்டல்வ ஆகிய பிரதேசங்களில் உள்ள கால்நடைகளுக்கே தற்போது தோல் நோய் பரவி வருகின்றது.

இது ஒரு வைரஸ் நோய் என்பதால், நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பாதிக்கப்பட்ட விலங்குகளுக்கு உடனடி சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)

# மனுவை மீளப் பெற்றார் ஜெரோம் பெர்னாண்டோ!

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தன்னை கைது செய்வதை தடுக்க உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை மீளப் பெற்றுள்ளார்.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே போதகர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதன்படி மனுவை மீளப் பெற்றுக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (05)



# நீதிமன்றச் செயற்பாட்டுக்கு இடையூறு: கைதான வர்த்தகர் விளக்கமறியலில்!

ஹட்டன் நீதிவான் நீதிமன்ற பதிவாளர் மற்றும் பணிக்குழாமின்கடமைகளுக்குஇடையூறுஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வர்த்தகர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கார் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில், நீதிவான் பிறப்பித்த உத்தரவை அமுலாக்குவதற்காகச் சந்தேகநபரின் இல்லத்துக்குச் சென்ற போது, இவ்வாறு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அது குறித்து நீதிமன்றப் பதிவாளரால் நோர்வூட் பொலிஸ்நிலையத்தில்தாக்கல்செய்தமுறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கை துசெய்யப்பட்டார்.

இதையடுத்து, ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவரை, எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22-.06.2023இல் வெளியிடப்பெற்றது.